போர்வாள்

வாள் 4] 30-9-50 [வீச்சு

நாசிக் காங்கிரஸ் மாநாடு

தலைவர் தாண்டனின் பூசாரித்தனம்!

ஆசிரியர்கள்:- காஞ்சி, மணிமொழியார்.
மா. இளஞ்செழியன், B.A.(HONS)

விலை 2 அ

Best copy available.

மறை தந்த மறை

சென்ற கிழமை மறைந்த பேராசிரியர் மறைமலையடிகளாரின் கருத்துரைகளிற் சில:—

நம் நாட்டவர்களுக்கோ அறிவாராய்ச்சியில்லாமையோடு ஒற்றுமைக் குணமும் இல்லை; பிறர்பால் அருள் இரக்கமும் இல்லை. தமக்குத் தம் மனைவி மக்களும் நெருங்கிய உறவினருமே உரியரெனவும், மற்றையோரெல்லாந் தமக்கு வேறானவரெனவும், தாமுந் தம்மினத்தவரும் நன்றாயிருத்தலே தமக்குவேண்டுமெனவும் தம்மவரல்லாத பிறரெக்கேடு கெட்டாலென்ன எத்தெருவே போனாலென்ன எனவும் நினைந்து, பிறர் நலத்தைச் சிறிதுங் கருதாதவர்களாய் இருக்கின்றனர். தன்னலங் கருதும் இப்பொல்லாத எண்ணத்தால் இத்தமிழ் நாட்டவர்க்குட் பிரிந்திருக்கும் அளவிறந்த சாதிகளும், அவற்றால் விளைந்திருக்கும் அளவிறந்த வேற்றுமைகளுங் கணக்கிட்டுச் சொல்லல் இயலாது. நாலுபேர் ஒன்றுசேர்வார்களானாற் சாதிப்பேச்சும்; பெண் கொடுக்கல் வாங்கலைப்பற்றிய பேச்சும்; அவன் சாதி கெட்டவன், அவனுக்கும் நமக்கும் உறவு கிடையாது, எங்கள் சாதி உயர்ந்தது, எங்கள் சாதியிற் ஒடித்தாற் பால் வடியும், எங்களிற் பத்து வீட்டுக்காரரொடுதாம் நாங்கள் கலப்பது வழக்கம், மற்றவர்கள் கையில் தண்ணீர்கூட வாங்க மாட்டோம் என்னும் பேச்சும்; அதைவிட்டாற் பொருள்தேடும் வகைகளைப் பற்றிய பேச்சும்; அதுவும் விட்டால் தமக்குப் பொருள்சேருங் காலத்தைப்பற்றியும், நோய்தீரும் நேரத்தைப் பற்றியும், மணம் ஆகும் நாளைப் பற்றியும், எந்த இடத்திற்போனாற் குறிகேட்கலாம், எந்தத் தெய்வத்துக்கு ஆடு கோழி வெட்டினால் இவை கைகூடும்? மாரியைக் கும்பிடலாமா? மதுரைவீரனைக் கும்பிடலாமா? காளியைக் கும்பிடலாமா? கறுப்பண்ணனைக் கும்பிடலாமா? எசக்கியைக் கும்பிடலாமா? சுடலைமாடனைக் கும்பிடலாமா? என்னுஞ் சிறு தெய்வச் சிற்றுயிர்க்கொலைக் கொடும் பேச்சும்; தனக்குப் பகையானவனைப் பல வகையால் இழித்துத் தன்னைப் பலவகையால் உயர்த்துச் செருக்கிப் பேசும் பேச்சுமே எங்கும் எல்லாரும் பேசக் காண்கின்றோம். புகைவண்டிகளிலும் இந்தப் பேச்சே, பொதுக் கூட்டங்களிலும் இந்தப் பேச்சே, கோயில்களிலும் இந்தப் பேச்சே, குளக்கரைகளிலும் இந்தப் பேச்சே.

நம்மவரிற் பெரும் பாலார்க்குக் கல்வி கற்பதிற் சிறிதும் விருப்பமேயில்லை. கற்கவேண்டிய கட்டாயத்தில் உள்ளவர்களுந் தமிழ் எழுதப் படிக்கத் தெரிந்தாற்போதுமென்றும் அதுவும் வேண்டாம், கையெழுத்துப் போடத் தெரிந்தாற் போதுமென்றும் எண்ணி அங்ஙனமே நடப்பவர்களாய் இருக்கின்றார்கள். இன்னும் பலர் "தமிழ்ப் படித்து என்னவாரிக் கொள்ளப் போகின்றான்? படியாதவர்களில் எத்தனையோ பேர் பொருள் தேடிச் செல்வர்களாயில்லையா!" என்று வாய்கூசாது பேசிப் போகின்றனர். இன்னும் பலர், "ஆங்கிலம் படித்தாலும் பெரிய வேலை கிடைக்கும், பெரிய அதிகாரங் கிடைக்கும், ஆங்கிலம் படித்துப் பட்டம் வாங்கின மாப்பிள்ளைக்கு ஐயாயிரம் பத்தாயிரத்துடன் பெண் கிடைக்கும்" என்று எண்ணுவதுஞ் சொல்லுவதுஞ் செய்து, இவைகளுக்காகவே தம் மக்களை ஆங்கிலம் பயிலச் செய்கின்றார்கள்.

துவக்கத்திலிருந்தே இந்த எண்ணத்தோடு ஆங்கிலங் கற்கின்ற பிள்ளைகள், அதனில் தேர்ச்சிபெற்றுப் பட்டங்கள் வாங்கினவர்களாய் வெளிவந்தவுடன், பொருள் வருவாய்க்கு இசைந்த வேலைகளைப் பெறுவதிற் கண்ணுங் கருத்தும் உடையராகின்றார்களே யல்லாமல், மேலும் மேலுங் கல்வியறிவைப் பெருக்கவேண்டுமென்னும் எண்ணம் உடையராகக் காணப்படவில்லை. அரசியல் துறைகளிலோ, நீராவி நிலையங்களிலோ, ஆங்கில வணிகர்தந் தொழிற்சாலைகளிலோ, இன்னும் இவை போன்ற பிறவற்றிலோ பெரிய பெரிய அலுவல்களில் அமர்ந்து பிறர்க்கு ஊழியஞ் செய்து பொருள் ஈட்டுவதிலேயே பெருமுயற்சியுடையவர்களாய் இருக்கின்றார்கள். இவ் வலுவல்களைப் பெறும்பொருட்டு, அவற்றிற்குத் தலைவர்களாயிருப்பவர்கள் கேட்கும் அளவெல்லாந் தாழ்ந்து கைக்கூலி கொடுக்கின்றார்கள்; அது மட்டுமோ, அத்தலைவர்கள் விரும்புகிறபடியெல்லாம் மானக்கேடான செயல்களைச் செய்வதற்கும் முன் நிற்கின்றார்கள்! பொருள் வருவாயுந் தலைமையுமே பெரியவாக நினைத்து, இவ்வாறெல்லாம் பெரும் பாடுபட்டுத், தாம் விரும்பிய வேலைகளை அடைந்த பிறகாவது, இவர்கள் எண்ணம் கல்விப் பயிற்சியிலும் கடவுள் வழிபாட்டிலும் பிறர்க்குதவி

(20-ம் பக்கம் பார்க்க)

சந்தா
உள்நாடு
ஓராண்டு: ரூ.6—8—0
6-மாதம்: ரூ.3—4—0
தனி இதழ்: 0—2—0

போர்வாள்
[திராவிடர் வார வெளியீடு]

சந்தா
வெளிநாடு
ஓராண்டு: ரூ.8—0—0
6-மாதம்: ரூ.4—0—0
தனி இதழ்: 0—2—6

வாள் 4 | திருவள்ளுவர் ஆண்டு 1981 புரட்டாசி 14 30—9—50 சனிக்கிழமை | வீச்சு 5

வெற்றி! வெற்றி! பெரியதோர் வெற்றி!

★

அறிஞர் அண்ணாதுரை விடுதலையானார்!

★

ஆட்சியாளர் பணிந்தனர்! வீரத் திராவிடர் வென்றனர்!

பத்தேநாளில் பணிந்தது சென்னை சர்க்கார். அதன் ஆணவம் தேய்கிறது. அதனை மூடுபனிபோல் மூடிக்கிடந்த ஆரியமாயை அகலுகிறது!

நமது இருதயத்தில் இடம் பெற்ற அறிவுக் களஞ்சியத்தை —அன்புருவை—திராவிடத்தை வாழ்விக்கவந்த அடலேறை— அதிகார வர்க்கத்தினருக்கு அச்சத்தை யூட்டிவரும் ஆற்றல் அரசை சட்டமில்லா சட்டத்தின் துணைகொண்டு, வெஞ்சிறையில் தள்ளி மூடிப்பூட்டி விட்டால், திராவிடத் திருநாடு கேட்போர் தொகை தேயும், தாம் நிம்மதியாக என்றென்றும் ஆளவந்தார்களாக நாடு சுற்றிவரலாம் என்று இறுமாந்துகிடந்த அரசாங்கம், இறுதியில் பணிந்துவிட்டது.

ஏன் இந்தப் பணிவு? ஏன் இந்த நடுக்கும்? எங்கே போயிற்று இந்த நல்புத்தி அன்று? ஏன் கண்மூடி தர்பார் நடத்தினர்?

ஆளவந்தார்களைப் பார்த்துக் கேட்கிறோம்—அவர்களை ஆட்டிப் படைக்கும் காங்கிரஸ் கண்ணியவான்களைக் கேட்கிறோம். தூபமிடும் அதிகாரபீடத்தில் அமர்ந்திருப்பவர்களைக் கேட்கிறோம். தேவை, தெளிவான பதில்.

எமக்கல்ல — திராவிடமக்களுக்குமல்ல — எதிர்க் கட்சியினரை மதிக்கும் பண்பையும், பொதுமக்கள் கருத்துக்குச் செவிமடுக்கும் பண்பையும், ஆளவந்தார்கள் துறந்துதான் அதிககால மாகிறதே — நாம் கேட்போமா, பொது மக்களுக்காக விளக்கம் கூறுங்கள் என்று. கேட்க நினைக்கவும் மாட்டோம்.

பின் யாருக்குப் பதில் தேவை? எவருக்கு? ஆளவந்தார்களின் நெஞ்சுக்கே, விளக்கம் தேவை.

சஞ்சல புத்திபடைத்தவர்கள் அவர்கள்தான்! தம் நெஞ்சையே தேற்றிக்கொள்ளட்டும், தகுந்த உரை கூறி ஆளவந்தார்கள்!

எதற்காக நமது உயிரை— அருமை வழிகாட்டியை, அரசாங்கம், நம்மிடத்திலிருந்து பிரித்தது? எந்தச் சட்டத்தின் கீழ் அண்ணாவை சிறைக்கனுப்பியது அரசாங்கம்?

நாட்டு மக்கள் நலிய என்ன கேடு செய்துவிட்டார் அண்ணா? எடுத்துக் காட்டட்டும் அறிவாற்றல் இருந்தால், இந்த ஆளவந்தார்கள். போட்டு

(7-ம் பக்கம் பார்க்க)

தொடர்கதை :

மிராசுதார் மகள்

காஞ்சி. கல்யாணசுந்தரன்

வேலைக்காரி வேதம்மாள் பகல் உணவைத் தயாரித்து விட்டு, மிராசுதார் மகள் சிறுமி விலாசவதியைத் தேடிக் கொண்டு, மாளிகையின் தெருப பக்கம் வந்தாள். 'விலாசவதி, விலாசவதி' என்று நான்கு ஐந்து வீடுகள் கேட்கும் வண்ணம் உரத்துக் கூவியும் கூட, விலாசவதி வரவில்லை. ஒருவேளை தாயாருடன் கொஞ்சி குலாவிக்கொண்டு இருந்தாலும் இருக்கலாம் என்ற நம்பிக்கையுடன் தாய்படுத்திருந்த அறைக்குள் நுழைந்தாள் வேதம். அங்கும் விலாசவதியைக் காணவில்லை.

மிராசுதார் மனைவியைக் கண்டதும், மணிதான் பகல் பன்னிரண்டு ஆகிவிட்டதே, ஏதாவது ஆகாரம் உட்கொள்ளுகிறார்களா என்று கேட்போம் என்ற எண்ணத்தின் மீது, பிணியாளின் அருகில் சென்றாள் வேலைக்காரி வேதம். 'அம்மா அம்மா' என்று மெல்லக்கூவி அழைத்தாள். பதில் கிடைக்கவில்லை. மிராசுதார் மனைவி நன்கு உறங்குகின்றக் காரணத்தால் தான், தனது அமைப்புக்கு வாய்திறக்கவில்லை எனத் தனக்குள் தீர்மானித்தவளாக உரக்க அழைத்தாள் வேலைக்காரி. அதற்கும் பதில் கிடைக்கவில்லை. தொட்டு எழுப்ப எண்ணி, மிராசுதார் மனைவியைப் புரட்டினாள் வேதம் வீட்டுச் சீமாட்டியின் தேகம், வாழைத் தண்டுபோல் சில்லிட்டிருப்பதை வேதம் தெரிந்து திடுக்கிட்டாள். அவள் சுப்பல் போல் இருந்தும் கூட வேலைக்காரியால், அதுசமயம் அசைக்க முடியவில்லை. நோயின் வேகத்தால் ஒருவேளை உணர்வற்று இருக்கிறாளோ வீட்டுக்காரி என்று நம்பிக்கொண்டு, அவள் மூக்கின் மேல் கை வைத்து பார்த்தாள் வேலைக்காரி. சுவாசம் ஒடுங்கிப்போய் இருந்தது.

வேலைக்காரிக்கு உண்மை விளங்கிவிட்டது. கைகால்கள் நடுக்குற ஆரம்பித்தன. தலை சுற்றியது. தேகம் வியர்த்துக் கொட்டியது. நாக்கு பேச மறுத்துவிட்டது. பிணமாகிக் கிடக்கும் மிராசுதார் மனைவியைப் பார்த்துப் பார்த்துக் கண்ணீர் விட்டுக் கதறினாள் வேதம்.

மிராசுதார், சாய்வு நாற்காலியில் வழக்கத்துக்கு மாறாக உறங்கிக் கொண்டு இருந்தார், ஏதோ கனவு கண்டு திடுக்கிட்டு எழுந்தார். கண்களைத் துடைத்துக் கொண்டு சுற்றுமுற்றும் பார்த்தார். தனக்கு நேரே, சுவரில் தொங்க விடப்பட்டிருந்தத் தனது மனைவியின் முழு உருவப் புகைப்படத்தின் மீது மிராசுதாரின் முதல் பார்வை விழுந்தது. அதே நேரத்தில் வேலைக்காரி வேதத்தின் அழுகுரலும் அவர் காதில் புகுந்தது. அவ்வளவுதான், மிராசுதார் விழுந்தடித்துக் கொண்டு, தன் மனைவி படுத்திருந்த அறைக்கு ஓடினார்.

தனது மனைவியின் படுக்கையண்டையில் உட்கார்ந்து வேதம் அழுதுக்கொண்டு இருப்பதைக் கண்டதும், மிராசுதாருக்கு விஷயம் புரிந்துவிட்டது. அடியற்ற மரம்போல் தரையில் சாய்ந்தார். கடகடவெனப் புரண்டார். சுவரில் தலையை மோதிக்கொண்டார். தனது இரு கைகளாலும் முகத்தில் பலமாக அறைந்துகொண்டார் வெறி கொண்டவர்போல் அறைக்குள் அப்படியும் இப்படியும் அலைந்தார். ஆவேசம் கொண்டவர்போல் 'கண்ணே கண்ணே' என்று மாளிகை அதிரும்படியாகக் கத்தினார். இப்படியே பத்து நிமிஷங்கள் கழிந்துவிட்டன.

இதற்குள், மிராசுதார் மனைவி இறந்தச் செய்தி வறுமையூர் பூராவிலும் பரவிவிட்டது. ஊரே ஒன்றுபட்டு வந்துவிட்டது அவர் மாளிகைக்கு. ஊர்ப் பெண்கள் மிராசுதார் மனைவியின் அருகில் கூடிவிட்டார்கள். மாளிகை முழுதும் அழுகுரல். ஊரெங்கும் மிராசுதார் மனைவியைப் பற்றின விமர்சனம். மிராசுதார் குடும்பத்தைப்பற்றின நினைப்பும் பேச்சுமே ஊர் முழுதும் பரவிக் கிடந்தது.

பண்ணை கணக்குப்பிள்ளை ஏகாம்பர அய்யர் முன்வர, மிராசுதார் மகள் விலாசவதி பின் தொடர, திருமாறன் உடன் வர, மூவரும் மிராசுதார் மனைவியின் சவத்தருகில் வந்தனர். சிறுமி விலாசவதியைக் கண்டதும், அங்குக் கூட் இருந்தப் பெண்கள் மேலும் அலரிப்புடைக்க ஆரம்பித்தனர் மிராசுதாரும் தன் மகளை தூக்கிக் கொண்டு, பிணமான தன் மனைவியின் அருகில் சென்றார்.

குழந்தை விலாசவதி 'அம்மா அம்மா' எனக் கத்திக்கொண்டு, தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்தாள். இப் பரிதாபக் காட்சி கல் நெஞ்சத்தையும் உருக்கும் காட்சியாக இருந்தது. விலாசவதியைக் கண்டதும், சவமாகக் கிடந்த மிராசுதார் மனைவியைப் பார்த்துப் பார்த்து நினைத்து நினைத்து அழுத அங்கிருந்த பெண்கள், அதை மறந்துவிட்டு, தங்கச் சிலைபோல் உள்ள விலாசவதிக்காகக் கண்ணீர் சிந்த ஆரம்பித்தார்கள்.

"அம்மா இனி பேசமாட்டார்கள்; சிரிக்கமாட்டார்கள்; வாரி அணைக்கமாட்டார்கள்; முத்தம் தரமாட்டார்கள்; கொஞ்ச மாட்டார்கள்; குலவ மாட்டார்கள்; பின்னல் போட மாட்டார்கள்; பூச்சூட மாட்டார்கள்; பொட்டிடமாட்டார்கள்; பட்டுப் பட்டாடை உடுத்த மாட்டார்கள்; பசிக்கு உண ஊட்ட மாட்டார்கள்; கதை சொல்ல மாட்டார்கள்; அணைத்துத் தூங்கவைக்கமாட்டார்கள்; அம்மா இனி இருந்த வீட்டில் நடமாட மாட்டார்கள்; அம்மா இனி என் கண்ணில் படவு மாட்டார்கள்" என்பன போன்ற எண்ணங்கள், விலாசவதி சிறுமியாக இருந்தாலும், அவளின் வளர்ச்சிபெறாத உள்ளத்தில் இடம் பெறாமல் இருக்க முடியுமா?

தாயின் முகத்தின் மீது தன் சிறுமுகத்தை வைத்துவைத்து எடுத்து அழுவதும், தாயின் மார்புமீதும் வயிற்றின் மீதும் படுத்துப் படுத்து அழுவதும், அருகில் உட்கார்ந்து தாயை 'அம்மா அம்மா' என்று உரத்துக் கூப்பிட்டு அழுவதுமாக விலாசவதி இருந்தாள். இந்தக் காட்சியைக் கண்டு கொண்டிருந்த சிறுவன் நெடுமாறனும் வாய் விட்டு அழுதுகொண்டே இருந்தான். விலாசவதியை மயக்க வார்த்தைகள் கூறி, அந்த இடத்தை விட்டுத் தூக்கிச் சென்று விட்டார், கணக்குப் பிள்ளை ஏகாம்பர ஐயர். மிராசுதாரும் மனம்தேறியவராய் அவ்விடத்தை விட்டு அகன்று, மாளிகையின் புறத திண்ணைக்கு வந்து உட்கார்ந்தார்.

சவ அடக்கத்திற்கான ஏற்பாடுகள் அனைத்தும் துரிதமாக நடந்தன. வெளியூர்களில் இருந்து வரவேண்டிய மிராசுதாரின் சுற்றத்தார்கள், நெருங்கிய நண்பர்கள் அனைவரும் வந்துவிட்டனர். செங்கல்பட்டில் பிரபல பாங்காக இருக்கும் மிராசுதாரின் மைத்துனர் ஜீவகாருண்ய முதலியாரும், தனதுகுடும்பத்துடன் வந்து விட்டார். அவர் ஒருவர் வந்து விட்டாலே போதும், மிராசுதாரின் வீட்டு சுப அசுபச் சடங்குகள் நிறைவேறுவதற்கு.

அதிர்வெடிகள் அடுக்கடுக்காகப் போடப்பட்டன. கொம்பு, தாரை, பறை முழங்கால்களுக்குக் குறைவில்லை. பூப்பல்லக்கு உயர்ந்த முறையில் ஜோடிக்கப்பட்டது.

மிராசுதார் மனைவியின் சவம் பன்னீர் கலந்த நீரால் கழுவப்பட்டது. தேகமெங்கும் பொன்னிறமான மஞ்சள் பூசப்பட்டது. காச்சி பவுனபுட்டா சேலை அணிவிக்கப்பட்டு, நெற்றியில் குங்குமம் இடப்பட்டு, எல்லா ஆபரணங்களும் பூட்டப்பட்டு, சீமாட்டியின் சவம் பூப்பல்லக்கில்கிடத்தப்பட்டது. பூப்பல்லக்கும் உறவினர்களால் தூக்கப்பட்டு, ஒருகல் தொலைவில் உள்ள சுடுகாட்டை நோக்கிப் புறப்பட்டு விட்டது. ஏராளமாகப் போடப்பட்டிருந்த கியாஸ்லைட்டுகள் இருட்டை, வறுமையூரில் இருந்தே ஓட்டி விட்டது என்றுதான் சொல்ல வேண்டும்.

அரையணா காலணா துட்டுக்கள், இரண்டணா நாலணா நாணயங்கள் சவத்திற்குமுன்னால் வாரி இறைக்கப்பட்டன. மிராசுதார்மனைவி இறந்ததற்காகக் கவலை தோய்ந்த முகத்துடன், சவத்துடன் சென்ற பலரும், ஒருவரை ஒருவர் தள்ளிக்கொண்டும் மிதித்துக்கொண்டும், அக்காசுகளைப் பொறுக்கினச்சம்பவம் சிந்தனையைக் கிளப்பக்கூடியதாகும்.

முன்னே பல்லக்குச்செல்லச் செல்ல, பின்னே வழியில் இருந்த வீடுகளில் தங்கிவிட்ட பெண்கள் பற்பல விதமாகப் பேசிக்கொண்டனர் மிராசுதார் குடும்பத்தைக்குறித்து.

'உத்தமி -- அழகி--கிருகலட்சுமி—பூவும்மஞ்சளோடு போயினாள் புண்ணியவதி—நல்லசாவு —இதுபோன்ற சாவு யாருக்குக் கிடைக்கும்—' இப்படி எல்லாம் மிராசுதார் மனைவிக்குப் புகழ்மாலை சூட்டப்பட்டது வறுமையூர் வயோதிகப் பெண்களால்.

அதேபோல் மிராசுதாரையும் அர்ச்சித்தார்கள் அப்பெண்கள்.

வேலைக்காரி வேதம்மாளைக் குறித்தும் அப்பெண்கள் பேசினார்கள். பேசினார்கள் என்று சொல்வதைக்காட்டிலும் ஏசினார்கள் என்று சொல்வதே பொருத்தமாகஇருக்கும். விசித்திரமாகவும், விபரீதமாகவும், விஷமமாகவும் இருந்தன அப்பேச்சுக்கள்.

"அவளுக்குக் கொஞ்சம்கூட சூடுசொரணை இல்லை போலிருக்கே!"

"பேரப்பார் வேதமாம் வேதம்— மானங்கெட்ட சிறுக்கி என்று வைத்திருந்தா நன்றாகஇருக்கும்!"

"மிராசுதார் குடும்பத்துக்கே ஒரு கோடாலியாக வந்தவளல்லவோ அந்தத் தடிக்கழுதை!"

"அந்தக் குடும்ப விளக்கு

இதுக்குள்ள அணைஞ்சி போனதுக்கே அந்த மூதேவிதான் காரணம்!"

"இனி மிராசுதார் மாளிகை வேதம்மாளின் கொலுமண்டபமாகத்தான் இருக்கும்!"

"வேதம்மாபாடுஇனிகொண்டாட்டந்தான்—கேள்வி கேப்பாரு இல்லாமெ இனி கொண்டாட்டம் அடிக்கலாம்!"

"கழுக்கு மழுக்கினு கடஞ்செடுத்த பொம்பரமாதிரி ஒரு பொம்பளை இருந்தா, ஆம்பெளிங்க மனம் கெட்டுப் போகாம இருக்குமா?"

"நாமென்னமோ கண்டபடி பேசறம்? எந்தப் புத்திலே எந்தப்பாம்பு இருக்கிறதோ யார் கண்டார்கள்?"

"பெண்தோஷம்—பெண்பாவம் பொல்லாது — காணாமே கேட்காமே வேதம்மா மேலே பழி சொல்லறது கூடாது."

இவ்வாறு எல்லாம் பேச்சு வார்த்தைகள் நடைபெற்றன. சவமும் இடுகாடு அடைத்தது. சவத்தை எரிக்க அடுக்கப்பட்டிருந்த கட்டைகளில் பாதிக்கு மேல் சந்தனக்கட்டைகளாகவே இருந்தன. சவத்தின்மேல் அணியப்படிருந்த அணிகள் அனைத்தும் கழட்டிக் கொள்ளப்பட்டு, கட்டியிருந்த விலையுயர்ந்த சேலையுடன் கட்டை மீது வைத்துத் தீ மூட்டப்பட்டது.

மாளிகை திரும்பினர் அனைவரும். வறுமையூர் முழுதும் மறைந்த மங்கை நல்லாளின் குணச்சிறப்புகளைப் பற்றியே பேசிக்கொண்டனர் மக்கள்.

மிராசுதாரின் மைத்துனர் ஜீவகாருண்ய முதலியார், தனது மனைவியையும் பத்து வயது சிறுவன் காருண்யசீலனையும் வறுமை யூரிலேயே விட்டுவிட்டு, செங்கல்பட்டுக்குத் திரும்பிவிட்டார். ஜீவகாருண்ய முதலியார், விலாசவதிக்குத் தாய் மாமன் முறையாகும். விலாசவதியின் தாயாரின் பெரிய தகப்பனார் மகன் தான் ஜீவகாருண்யமுதலியார். மிராசுதாருக்கு இவரைத் தவிர வேறு நெருக்கமான உறவினர் கிடையாது. எனவே, மைத்துனரை குடும்பத்துடன் சில நாள் தங்கி இருக்கும்படி வற்புறுத்தினார் மிராசுதார். வற்புறுத்தலை மீற முடியாமலும் எதிர் காலத்தை நினைத்தும் தனது மனைவியையும் ஒரே மகனையும் அங்கேயே சில நாள் தங்கி இருக்க வைத்து விட்டுப் போனார்.

தாயின் பிரிவாற்றாமையால் விலாசவதி சோர்வுற்று இருந்தாள். அவளுடைய குறு குறு பார்வை மங்கிக் கிடந்தது. மிராசுதார் கூறிய ஆறுதல் மொழிகள் அனைத்தும் பயனற்றுப் போயின. தாயின் புகைப் படத்தண்டை நின்று ஏதேதோ பேசுவாள்—தேம்பித் தேம்பி அழுவாள்—'அம்மா அம்மா' என்று கூப்பிட்டு படத்தில் தெரியும் தாயின் முகத்தையே இமை மூடாமல் பார்த்துக் கொண்டு இருப்பாள். அவளை அங்கிருந்து அப்புறப்படுத்துவது அவ்வளவு சுலபத்தில் நடக்கிற காரியமன்று. புதிதாக வந்துள்ள மாமி அழைத்தாலும் சரி, பழைமையாக உள்ள வேதம்மாள் அழைத்தாலும்சரி, விலாசவதியின் அழையும் அடமும் கூடுதலாவதுதான் மிச்சமாகும்.

மிராசுதார் அழைக்கப்போனாலோ, மனைவியின் புகைப்படத்தைக் காண்பதால் தனக்கு ஏற்படுகிற துக்கம் ஒரு பக்கம் இருக்க, சிறு மகளின் நிலையைக் காண்பதால் ஏற்படுகிற துக்கமும் மிராசுதார் உள்ளத்தில் குடி புகுந்துவிடும். இவரும் விலாசவதியுடன் போட்டி இடுவார் அழுவதில்.

திருமாறனைக்கண்டால் ஒருவாறு ஆறுதல் பெறுவாள் விலாசவதி. அவன், தான்நிற்குமிடம்வரக் கண்டதும், அவனிடத்திலும், 'அம்மா என்னையே பார்க்கிறாள் பாருடா' என்று கூறி அழுவாள். இது கேட்டுத் திருமாறனும் அழுவான். அச்சிறுவன் ஒருவனால்தான் விலாசவதியை அங்கிருந்து வெளியில் அழைத்துச் செல்ல முடியும். அவன் தன்முன்தோன்றி, உடன், தன்னைவிட்டுப் பிரிந்து சென்று விடுகிறானே என்ற காரணத்தால்தான் திருமாறன் பின் செல்லும் குணம் விலாசவதிக்கு ஏற்பட முடிந்தது. பலநாள் ஒன்றாகச் சேர்ந்து ஆடிப்பாடி விளையாடினதின் விளைவுதான் திருமாறனைப் பிரிந்திருப்பது என்பது விலாசவதிக்கு ஏதோபோல் இருந்தது. ஒருவருக்கு ஒருவர் நீங்காநிழல் போல் திருமாறனும் விலாசவதியும் வளர்ந்து வந்தனர்.

(தொடரும்)

படித்துவிட்டீர்களா?

மு. கருணாநிதி

தீட்டிய புதுமைக் கருத்துகள் பொதிந்த புரட்சி இலக்கியம்

"தூக்கு மேடை" (நாடகம்)

விலை. 1 4 0

மக்கள் மன்றத்தில் மலர்ந்துள்ள

"மருதநாட்டு இளவரசி" (திரைப்படக் கதை) அச்சில்

விற்பனைக் கழிவு 25 சதம்

இளங்கோ பதிப்பகம், மாயூரம்.

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

விரிக்கட்டும் பொது மக்கள் முன்பு புள்ளிவிவரம் இருந்தால், இந்தப் பதவிப்பித்தர்கள்!

இதற்குக் கனங்கள்கூட வேண்டாம். அவர்களை மிரட்டித் திரிந்துகொண்டு இருக்கும் காங்கிரஸ் கனவான்கள்தான் எடுத்துக் காட்டட்டும், அறிஞரின் ஏட்டிலே தீட்டியுள்ள துவேஷத்தை!

துவேஷத்துக்கும் நட்புக்கும் —நேர்மைக்கும் சூழ்ச்சிக்கும்— நீதிக்கும் அநீதிக்கும் — அறத்துக்கும் மறத்துக்கும் — உள்ள வேற்றுமைகளையாவது அறிந்துகொண்டு இருக்கிறார்களா இந்த ஆளவந்தார்கள்? அதற்கான கல்வி — அறிவு — தகுதி — திறமை — ஏதாவது இவர்களுக்கு உண்டு என்று நாம் கூறினால்கூட, அவர்களே ஏற்றுக்கொள்ள மறுத்து விடுவார்களே!

'ஆரியமாயை' என்று ஏடு எழுதி, 'இந்தியப் பிரஜை'களுக்குள்ளாக துவேஷத்தீயைக் கொளுத்திவிட்டாராம் அண்ணா! அதன் விளைவாக ஆரியக்காடு தீப்பிடித்து எரிகிறதாம்! அதனை அணைக்கத்தான் 'ஆரியமாயை' எனும் நூல் தடுக்கப்பட்டதாம்! அண்ணாமீதும் 153 A. பிரிவின்கீழ் வழக்குத் தொடக்கப்பட்டு 700 ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டதாம்! அபராதம் கட்டத்தவறினால் ஆறுமாதம் சிறைவாசம் என்றும் மன்றம் தீர்ப்பளித்ததாம்! அண்ணா அபராதம் கட்டத் தவறி சிறைக் கோட்டம் புகுந்தார்!

தான் பிறந்த திராவிடர்குலம் ஆரியதாசர் குலமாகக் கிடப்பது கூடாதுஎன்று கூறுவது, துவேஷம்!

ஆரியப் பண்பாட்டைப் பிட்டுப் பிட்டுக்காண்பிக்கப்புகுவது, துவேஷம்!

ஆரிய ஆபாசத்தை, பல நாட்டு அறிஞர்கள் அவ்வப்போது வரலாற்று ஏடுகளிலே வேறு மொழியில் எழுதியுள்ளதைச் செந்தமிழில் தருவது, துவேஷம்!

திராவிடர், தாசர்நிலை மாற நினைப்பது, துவேஷம்!

அதற்காக ஏடு எழுதுவது துவேஷம்! எடுத்துக்காட்டி இடித்துக் கூறுவது துவேஷம்!

வஞ்சகத்தை வெறுக்கச் சொல்வது, துவேஷம்!

நேர்மைக்கும் நீதிக்கும் மதிப்பளித்து நடவுங்கள் என்று உரைப்பது துவேஷம்!

பிறப்பிலே உயர்வு தாழ்வு பேசுவோர் மக்களின் பகைவர்கள் என்று எச்சரிப்பது, துவேஷம்!

வருணாஸ்ரம வலையில் சிக்காதீர் என்று அறிவிப்பது, துவேஷம்!

சனாதனச் சாக்கடையில் சாயாதீர் என்று கருத்துரை புகல்வது, துவேஷம்!

மனிதனை மனிதனாகப் பாவித்து நடக்கும் மனவளம் பெறுங்கள் என்று ஏட்டிலே நிலைநாட்டுவது, துவேஷம்!

ஆரிய கலாசாரம் நினைக்கக் கொல்லும் நஞ்சு—திராவிடர் கலாசாரம் நினைக்க உயிர்ப்பளிக்கும் பாலூற்று என்று, தக்கோர் ஆதாரங்களுடன், ஆணித்தரமாக, ஏட்டிலே சுட்டிக் காட்டுவது, துவேஷம்!

திராவிடர் தன்மானம் பெற, இழந்த இடத்தை மீண்டும் கைப்பற்ற, ஊக்கமும் உறுதியும் கொள்ளவேண்டுமென்று வாதிடுவது, துவேஷம்! துவேஷம்!!

சட்டப் புத்தகத்திலே உள்ள 153-A சட்டத்தின் நாலுகால் பாய்ச்சல்! அதன் கீழ் விசாரித்துத் தண்டிக்க நீதி மன்றம்! இதற்கெல்லாம் சிகரம்போல் ஒரு சர்க்கார்!

நல்ல துவேஷம்! நல்ல சர்க்கார்! நல்ல நாடு!

துவேஷம் எது?-அறுதியிட்டுக் கூறுவதென்பது ஓர் சிக்கலான பிரச்னை. முடிவு காண்பது குழப்பத்தின் மேல் குழப்பத்தில் கொண்டு போய்விடக் கூடியது.

ஆரியர் போற்றும் நான்கு வேதத்திலும் 'துவேஷம்' ஊழித் தீயெனக் கனன்று கொண்டு இருக்கிறது!

'துவேஷம்' பிறந்த இடம் புராணங்கள்!

'துவேஷம்' இதிகாசங்களிலே நெடி நாற்றம் அடித்துக் கொண்டு இருக்கிறது!

'துவேஷத்தின்' வித்து வேதவியாசர்!

'துவேஷத்தின்' முன்னோடும் பிள்ளை மனு!

'துவேஷத்தின்' பாதுகாவலர்கள் பராசர், மாந்தாதா, யாக்ஞவல்கியர்!

'துவேஷம்'தான் கண்ணன் வெட்டிய படுகுழியாம் கீதையில் படிந்து கிடப்பது.

'துவேஷம்' அரசோச்சிக் கொண்டு இருக்கும் இந்து சட்டத்தில் இரண்டறக் கலந்து இருக்கிறது!

'துவேஷம்' 'கடவுள்' சன்னிதானங்களிலே இன்றும் கோரமாக விளையாடிக் கொண்டு இருக்கிறது!

'துவேஷம்' மனித உருவில் நாட்டில் நடமாடிக் கொண்டு இருக்கிறது!

இவ்வளவும் துவேஷமாகப் படவில்லை ஆளவந்தார்களுக்கு! இவைகள்மீது எல்லாம் அவர்கள் சீற்றம் செல்லக் காணோம்! 153A. சட்டம், பெட்டிப் பாம்பாகிறது இவ்வளவு விஷபத்திலும்!

ஏற்கனவே மூட்டிய துவேஷத்தைக் கருவறுக்க, அதனால் உண்டாக்கப்பட்ட ளைக்கத்

(10-ம் பக்கம் பார்க்க)

பசி வந்திட....!

"காம்ரேட்"

கந்தன் ஓர் ஏழை உழவன். கோழி கூவும்போது வயலுக்குச் சென்று கோட்டான் கூவும் போது குடிசைக்குத் திரும்புவான். எலும்பு கரைய—தேகம் இளைக்க-கந்தன் உழைக்கிறான். உழைக்கத் தயங்குவதில்லை. உடம்பு வலியைப் பொருட்படுத்துவதில்லை. உற்றார் உறவினரோடு கொஞ்சிக் குலாவுவதில்லை. கழனி கழனி என்று தான் காற்றாய்ப் பறந்து பாடுபடுகிறான் கந்தன்.

கந்தன் குடும்பம் சிறிதல்ல பெரிது. அவன் ஒருவன் உழைப்பில் ஒன்பது பேர் உயிர் வாழ்ந்தாக வேண்டும். தளர்ந்த வயதடைந்த பெற்றோர் இருவர். பிணியாளாகிப் படுத்த படுக்கையாகக் கிடக்கும் பத்தினி ஒருத்தி. அவள் பெற்றெடுத்த ஆறு குழந்தைகள், கந்தன் சீராட்டி விடவேண்டிய கால் கட்டுகள்.

பூனைக் குட்டிகளின் உறையுள் கந்தன் வீட்டு அடுப்பு. பசியின் பிடியிலே பாலகர்கள். மரணத்தின் அணைப்பில் மனைவி. குமுறும் நெஞ்சுடன் வயோதிகப் பெற்றோர்கள். உழைப்புக்கும் உயிர் வாழ்வதற்கும் இடையில் ஊசலாடிக் கிடக்கும் கந்தன்.

கந்தன் உழைப்பது அதிகம்—பெறுவது குறைவு—மிகமிகக் குறைவு. உழைப்பின் முழுப் பலனையும் கந்தன் அடைய முடியாமல் சில ஏற்பாடு இருக்கிறது. தன் உழைப்பின் ஒரு பகுதி பலனைத்தான் கந்தன் அடைகிறான். பெரும் பகுதியை மிராசுதார் முதலை விழுங்கி விடுகிறது.

கந்தன் உழைப்பின் விளைவு, களத்திலே காணும் அம்பாரம். மிராசுதார் முகத்திலே காணும் மகிழ்ச்சி, கந்தன் பட்டபாட்டின் பலன். மிராசுதார் வீட்டிலே பிரகாசமாக எரியும் விளக்குக்குக் கந்தன் தனது அரிய சேவையால் எண்ணெய் ஊற்றுகிறான். மிராசுதார் மனையின் மாட்சி, கந்தன் தேடித்தந்தது.

பாடுபட்டறியாத மிராசுதார் வீட்டிலே சுகம் தாண்டவமாடுகிறது. பாடுபடுவதைத் தவிர வேறு ஒன்றும் அறியாத கந்தன் குடிசையிலே இல்லாமை கோர நர்த்தனம் செய்கிறது.

சோம்பேறியின் மாளிகையிலே இன்பம் பெருக்கெடுத்துக் கிடக்கிறது. பாட்டாளியின் ஓட்டை குடிசையிலே துன்பம் நிரம்பி வழிகிறது.

கந்தன் உழைப்பு உறிஞ்சப் படுகிறது மிராசுதாரால். உழைப்பாளி வறுமைப் படுகுழியில் தள்ளப்பட்டுக் கிடக்கிறான். உழைக்கத் தெரியாதவன் உண்டு கொழுத்துக் கிடக்கிறான்.

உழைக்கும் உத்தமனுக்கு ஏழை என்ற திருநாமம், பாடுபடாத பாதகனுக்கு செல்வச் சீமான் என்ற சிறப்புப் பெயர்.

கந்தன் உழைப்பில் உல்லாசமாகக் காலம் கழிக்கும் மிராசுதாரை எவரும் பகல் கொள்ளைக்காரர் என்று கூப்பிடுவது கிடையாது. சட்டமும் அவரை அப்பெயர் இட்டு அழைப்பது இல்லை. சமுதாயமும், அவருக்கு அப்பெயர் சூட்டுவது கிடையாது.

சட்டம், அவருக்குத் துணை நிற்கிறது. சர்க்கார் அவருக்குப் பாதுகாப்பு அளிக்கிறது. சமுதாயம் அவருக்குப் புகழ் மாலை சூட்டுகிறது.

கந்தன் ஓர் ஏமாளி. மிராசுதார் ஓர் எத்தன். கந்தன் தேய்ந்துகொண்டே இருக்கிறான்—மிராசுதார் பெருக்கிறார்.

கந்தனுக்கு விழிப்பு ஏற்படவில்லை, கண்ணுக்கு முன்னால் களவு நடப்பது தெரிந்தும்கூட! கந்தன் குருடனல்ல. அவன் முகத்தில் உள்ள இருகண்களும் மின்சார விளக்குகள் போல் தான் இருக்கின்றன.

கந்தன் கருத்து குருடாகிக் கிடக்கிறது. அக்குருடும் இடையிலே ஏற்பட்டதல்ல. பரம்பரை பரம்பரையாக கந்தனை பலமாகப் பற்றிக்கொண்டு இருப்பது.

கந்தன் கேட்ட ஒழுக்க போதனையால், தர்மோபதேசத்தால், கண்ணுக்கு முன்னாலே களவு நடப்பது தெரிந்திருந்தும் கூட, கந்தனுக்குத் தெளிவேற்படவில்லை. நடந்துகொண்டு இருப்பது களவுதான் என்று புரிந்துகொள்ளவே, நடப்பதை அறிந்துகொள்ளவே அறிவாற்றல்பெறாத நிலையில், அந்த அக்கிரமத்தை ஒழித்து நீதி கேட்க எங்கே துணிவு பிறக்கப்போகிறது கந்தனுக்கு?

கந்தன் உழைப்பால் கதிர் முழும் கண்ட கழனியில் ஊரார் மாடு மேய்கிறது. இதனைக் காண நேர்ந்த கந்தனின் கண்கள் தீப்பொறிகளைக் கக்குகின்றன. கதிரை மேய்ந்த மாடுகள் இரண்டொன்றின் கால்களை நொண்டியாக்குகிறான். ஒரு மாட்டின் இடுப்பை முறிக்கின்றான் பலமான தடிகொண்டு தாக்கிக் கந்தன்.

ஆம்! தனது உழைப்பு, ஊர் மாடுகளால் சூறையாடப்படுவது கண்டு கோபம் கொப்பளித்துக் கொண்டு வருகிறது கந்தனுக்கு. அந்தக்கோபத்தின் விளைவுதான் மாடுகள் படும் வேதனை.

கந்தனால் முடிகிறது, தனது

பாட்டை பறித்துக் கொள்ளும் மாடுகளுக்குப் பாடம் கற்பிக்க. கந்தனுக்குத் தெளிவாகத் தெரிகிறது, பிறர் பட்டபாட்டை மேய முன்வந்த மாடுகள் செயலின் முழுப் பொருளும்.

தனது உழைப்பை அபகரித்துக் கொள்ளும் மாடுகளின் போக்கும், அதனைத் தடுக்க எடுத்துக் கொள்ளவேண்டிய நடவடிக்கையின் தன்மையும், அதன் அவசியமும், கந்தனுக்கு விளக்கமாகத் தெரிகின்றன.

இந்த விளக்கத்தைக் கந்தனுக்குப்போதித்தவர்கள்,-தூண்டினவர்கள்—பிறர் அல்லர். கந்தனின், சொந்த சிந்தனையின் விளைவு இது.

கதிர் பழுத்துத் தலை சாய்ந்துவிட்ட நிலையில், யாரோ ஒருவன், நடு இரவில் கழனியில் இறங்கி, கதிர் மணிகளைக் கொய்து கொண்டு இருக்கிறான். கந்தன் கண்டுவிடுகிறான்.

கதிர்களைத் திருடிய கள்வனைக் கனமாகப் புடைக்கிறான் கந்தன். அவனை மரத்தோடு மரமாகக் கட்டிப் போட்டுவிடுகிறான் கந்தன். புளியம் மிலார் கொண்டு, தன் உழைப்பைச் சூறையாட வந்த சோம்பேறிப் பயலைச் சாடுகிறான், தன் கை வலிக்கும் வரையில் கந்தன்.

கதிரைக் களவாட இரவில் வந்தவனை, 'திருடனே' என்று தூற்றுகிறான். 'ஏற்குமா இப்பணி' என்று நீதி கேட்கிறான். 'உழைக்கக் கேடு என்ன' என்று உழைப்பின் மேன்மையை உபதேசிக்கிறான். கல்வி வாசனை இல்லாத கந்தன் எவ்வளவோ நியாய வாதங்களைக் கிளப்புகிறான்.

தான் பட்டபாட்டை மாடுகள் மேய்வது கண்டால், சோம்பேறி ஒருவன் எடுத்துப்போக முனைவது பார்த்தால், கந்தனுக்குக் கோபம் பிறக்கிறது. அந்தச் செயல் அக்கிரமமானது என்று உணருகிறான். அதற்கான தண்டனை தரப்படவேண்டிய தன் அவசியத்தையும் அறிந்து கொள்ளுகிறான். அதற்கான சக்தி தனக்கு இருக்கிறது என்பதையும் தெரிந்து கொள்ளுகிறான். அதற்கான உரிமை தனக்கு உண்டு என்பதையும் உணர்ந்து கொள்ளுகிறான். அதற்கான முறையையும் புரிந்து கொண்டு மேற்கொள்ளுகிறான் கந்தன்.

ஆனால் தான்பட்ட பாடு முழுதும் மிராசுதாரால் கொண்டு போகப்படுவதில் மறைந்துகிடக்கும்உண்மையைப் புரிந்து கொள்ள கந்தன் மறந்துவிடுகிறான். இப் பொருந்தாப் போக்கைத்தடுத்துநிறுத்தவேண்டிய முழுப்பொறுப்பும் தனக்கே உண்டு என்பதிலும் கந்தனுக்குத் தெளிவு பிறப்பது கிடையாது. ஒருவேளை தெளிவேற்பட்டாலும், கந்தனுக்குத் துணிவு ஏற்படுவது கிடையாது. துணிவு ஏற்பட்டாலும், துன்பத்துக்குப் பரிகாரம் தேடிக்கொள்ள வழிவகை புரிவதில்லை கந்தனுக்கு.

காரணம்?

முன் கூறிய பரம்பரைப் பழக்கவழக்கமும், கபடர்கள் தரும் தர்மபோதனைகளுந்தான், சிலந்திக் கூட்டிலே சிக்கி, மீள மார்க்கம் தெரியாமல், சிலந்தியின் சித்திரவதைக்குள்ளாகி, முடிவில் ஜீவனை இழக்கும் சிற்றுயிர்கள் போல், கந்தனையும், வறுமையோடு போராடிப் போராடி, காலம் வந்தால் மரிக்க வைக்கிறது.

கந்தன் பெற்று வந்த போதனை, பொறுமை—அமைதி — சகிப்புத்தன்மையின் பக்கம் இழுத்துச் செல்ல, குடும்பத்திலே ஏற்பட்ட கொந்தளிப்பு, ஆத்திரம் — ஆர்ப்பாட்டம்— கிளர்ச்சியின் பக்கம் இழுத்துச் செல்ல, கந்தனின் மனம் இரண்டு இடத்துக்கும் இடையில் ஊஞ்சலாடிக் கொண்டு இருந்தது.

மூப்படைந்த பெற்றோர்களின் பயங்கரமான நிலை, மரணப்படுக்கையில் கிடக்கும் மனைவியின் பரிதாபகரமான காட்சி, பட்டினியால் சிறுகச் சிறுகச் செத்துக் கொண்டிருக்கும் குழந்தைகளின் கோர மரணத்தன்மை, கந்தனை மீளாத் துன்பத்தில் மூழ்கச் செய்தன.

குடும்பத்தைக் கவனிக்கும் பொழுது கோபமும், துன்பத்தைத் துடைத்துக் கொள்ள வேண்டுமென்ற நினைப்பும், அதற்கான முறையை மேற்கொள்ளவேண்டுமென்ற துணிவும், கந்தன் உள்ளத்திலே உருவாகும். அடுத்த கணத்திலே அந்த உருவத்தைக் கலைத்துவிடும், கந்தன் பெற்று வந்த

(12-ம் பக்கம் பார்க்க)

புதிய வெளியீடு.

தமிழிசைப் பாடல்

(புதுவைச் சிவம்)

இசையரங்கில் பாடுவதற்கேற்ற கீர்த்தனை மெட்டுக்களில் ஆனது. விலை 6 அணா. தனிப் புத்தகத்திற்கு 7 அணாத் தபால்தலை அனுப்புக.

விற்பனைக் கழிவு 25 %. அனுப்பும் செலவு தனி.

நிர்வாகி: ஞாயிறு பதிப்பகம்.
பாண்டிச்சேரி.

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

தைத் துடைக்க, ஏற்பட்ட மன வளத்தை மாற்ற, ஊறிப் போயிருக்கிற இழிவை அகற்ற, அறிஞர் அண்ணா ஏடு எழுதினால், அதிலும் பிறநாட்டு அறிஞர்கள் எடுத்துக் காட்டியுள்ளதை தமிழிலே நூல் வடிவில் தந்து உதவினால், அதிலே துவேஷம் தொக்கி இருப்பதைக் கண்டு விட்டார்களாம் ஆளவந்தார்கள்! அதற்காக வழக்குத் தொடுத்தலாம்! அபராதம் விதித்தலாம்! அருந்துணைவரை சிறையில் அடைத்தலாம்! சபாஷ்! நல்ல மதியூகி மந்திரிகள்!

காலிலே தைத்து, குருதியைக் கொப்பளித்து வெளிப்படச் செய்த கருவேல முள்ளைக் காய்வதை விட்டுவிட்டு, அதனை அகற்ற, ஏற்பட்ட வலியைப் போக்க, அருந்துணை புரிந்த கூரிய முனையை, கடிந்து கொள்வதுபோல் உள்ளது ஆளவந்தார்களின் சிந்தனையும்—செயலும்!

பிறாது கொடுமையால் தன் தேகத்தில் ஏற்பட்டத் தழும்புகளையும், புரையோடிய புண்களையும் ஆற்றிக் கொள்ள அறுத்துக் கிழித்து மருந்துவைத்துக் கட்டியும், ஆறிப்போன பிறகு மீண்டும் அவ்வாறு நேராமல் இருக்கும் அறிவுரை கூறியும், நற்பணி புரிந்துவரும் மருத்துவரைக் கண்டிக்கவும் தண்டிக்கவும் முனைவதும், புண்ணைத் தோற்றுவித்தவர்களையும், புண்ணல்ல அது பாதுகாக்க வேண்டிய புனிதம் என்று மயக்கித் திரிவோரையும், புண்ணுறாமல் பார்த்துக்கொள்ளப் பெரு முயற்சி மேற்கொள்வோரையும் போற்றவும் புகழவும் செய்வது போல் இருக்கிறது ஆளவந்தார்கள் புத்தியும்—போக்கும்!

நமது அறிஞர், மாஜிஸ்ட்ரேட் விதித்த அபராதத் தொகையைக் கட்ட மறுத்தார். சிறை புகுவேன் என்று கூறிவிட்டு சிறை புகுந்தார். நாட்கள் பத்துத்தான் ஆயின.

இத்தீர்ப்பை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுப்பதா இல்லையா என்பது ஆலோசனையில் இருந்தது.

நமது இயக்கத் தோழர்கள் ஆயிரக் கணக்கானவர்கள், அண்ணாவின் அருகில் இடந்தேடிக்கொள்ள, அதற்கான அழைப்பை ஒவ்வொரு விநாடியும் எதிர்பார்த்துக்கொண்டு இருந்தனர்.

காளையர்கள் மட்டுமல்ல, காடு காணவேண்டிய குடுகுடு கிழவர்கள்கூட சிறைபுக வரிந்து கட்டிக்கொண்டு, நமது படைவரிசையில் இடம் பிடித்துக் கொண்டனர்.

'எங்களுக்கு எப்பொழுது அழைப்பு கிடைக்கும்? எத்தனை நாளைக்கு எங்கள் ஆருயிர் அண்ணாவைப் பிரிந்து வாழ்வது? ஏன் எங்கள் உணர்ச்சியை குலைக்கிறீர்கள்? எங்கள் முயற்சியை தடுப்பது ஏற்குமா?' என்றெல்லாம் நமது தோழர்களின் விழி அறிவுறுத்திக்கொண்டே இருந்தது.

எதிர்பாராவகையில் 28—10—50 வியாழக்கிழமை அன்று அண்ணாவை விடுதலை செய்ய, சென்னை சர்க்கார் கட்டளைப் பிறப்பித்துவிட்டது.

அண்ணாவிடத்தில் ஏதாவது நிபந்தனை பெற்றுக்கொண்டுள்ளதா சர்க்கார். ஒன்றுமில்லை.

பின் ஏன் விடுதலை செய்வதில், அண்ணாவை சிறையில் தள்ளுவதற்கும் காட்டிய ஆர்வத்தைக் காட்டிலும், அதிக ஆர்வம் காட்டிக் கொள்ள முனைந்திருக்கிறது சர்க்கார்?

இது என்ன புதிர்? என்ன இரகசியம் சர்க்காரின் செயலிலே மறைந்து கிடக்கிறது?

அண்ணாவை விடுதலை செய்ய 27-10-50-ம் தேதி வெளியிட்ட சர்க்கார் அறிக்கையின் சாரம்சம் இதுதான்:—

சில காலமாகவே, குறிப்பிட்ட சில வகுப்பினர்களுக்கு எதிராக, வகுப்பு துவேஷம் பொதுமக்களிடம் பரப்பப் பட்டு வருகிறது.

வடநாட்டார்களுக்கு விரோதமாகவும் பிரசாரம் செய்யப்படுகிறது.

வேண்டுமென்றே சட்டத்தை மீறும் செயலை சர்க்கார் அனுமதிக்காது.

முக்கியத்துவமில்லாத சொற்பொழிவுகளையும், பிரசுரங்களையும் சர்க்கார் கருதுவதில்லை.

ஆழ்ந்த ஆராய்ச்சிக்குப் பிறகு (after Careful Consideration) **சர்க்கார் 153-A. பிரிவின் படி வழக்குத் தொடுத்தது.**

வழக்கை ஆராய்ந்து பார்த்ததில், அவரை மேலும் காவலில் வைத்திருப்பது இனியும் அவசியமில்லை என்று சர்க்கார் கருதுகிறது. (On a revew of the cases, the Government consider that it is no longer

எல்லாம் புதியவை

★

	ரூ.	அ.
அய்யோ கடவுளே	0	3
அறிவுக் கதிர்கள்	0	3
அண்ணா கண்ட தியாகராயர்	0	4
பனகல் அரசர்	0	3
சுவாமிகாள்	0	4
குறள் காட்டும்தெய்வம்	0	3
காதலர் பாதையில்	0	5
இதோகடவுள் களஞ்சியம்	0	4
வஞ்சகி	0	8
லீலாராணி	0	8

பகுத்தறிவுப் பாசறை,
பவழக்காரத் தெரு, சென்னை

necessary to keep this persons in custody.)

ஆழ்ந்த ஆராய்ச்சிக்குப் பிறகுகே அண்ணாமீது வழக்குத் தொடுத்திருக்கிறது சர்க்கார்.

வழக்கை ஆராய்ந்து பார்த்ததில் அண்ணாவை இனியும் காவலில் வைத்திருப்பது அவசியமற்றது என்று சர்க்கார் கருதுகிறது.

இரு ஆராய்ச்சிகளையும் கவனிக்க வேண்டும்!

சர்க்கார், அண்ணாமீது வழக்குத் தொடுத்ததிலும் பொருள் இல்லை. அதற்காக சர்க்கார் செய்ததாகச் சொல்லும் ஆராய்ச்சியிலும் பொருத்தமில்லை.

அதேபோல் அண்ணாவை காவலில் வைத்ததிலும் அர்த்தமில்லை. தண்டனை காலம் முடிவதற்குள், இனியும் அண்ணா சிறையில் இருக்கத் தேவை இல்லை என்று ஆராய்ந்து சர்க்கார் முடிவிற்கு வந்திருப்பதிலும் கருத்தில்லை.

அதிகாரத்திலிருப்பவர்கள், தங்களுக்கு மாறுபட்டக் கோட்பாடு கொண்டிருப்பவர்களை, தாங்கள் நினைத்தால் சிறையில் தள்ளி பூட்டலாம்—விரும்பினால் வெளியில் விட்டு விடலாம்—என்ற ஆணவ முடை நாற்றம்தான் வீசக்காண்கிறோம்.

திராவிட இனத்தைத் தட்டி எழுப்ப நாம் பேசுவதும் எழுதுவதும், சர்க்காருக்கும் 'துவேஷ'மாகப் படுகிறது — சர்க்கார் குறிப்பிடும் ஒரு சில வகுப்பாருக்கும் விரோதமாகப் படுகிறது. அறிஞர் அண்ணா மட்டுமல்ல, இன்னும் நம்மில் ஆயிரம் ஆயிரம் இளங்காளைகள் சிறைபுக வேண்டி நேர்ந்தாலும், தாலமுத்து நடராஜன்கள் போல் சிறையிலே பிணமாவதாக இருந்தாலும், ஆரிய துர்நாற்றம் சிறிய அளவிலாயினும் வீசிக்கொண்டு இருக்கிற வரையில், நாம் அப்பணியை மேற்கொண்டு வெற்றி பெறும் வரையில் தொடர்ந்து செய்யாமல் இருக்கப்போவதில்லை.

அதே போன்று திராவிடம், வட நாட்டின் தொடர்பை அறுத்துக்கொண்டு, தனி அரசாக அமைக்கப்படும் வரையில், நாம் வடவர் ஏகாதிபத்தியத்தைக் கண்டித்துத், திராவிட மக்களை ஒன்று திரட்டாமல் இருக்கப்போவதில்லை.

இந்த இருதுறை பற்றியும் வாய்திறப்பதில்லை, ஏட்டிலேதீட்டுவதிலலை என்ற நிபந்தனை ஒன்றும் விதிக்கவில்லை சர்க்கார் அண்ணாவின் விடுதலைக்கு. 'ஆழ்ந்து சிந்தனைக்கு'ப் பிறகு தான் சர்க்கார் இதுபற்றி நிபந்தனை எதுவும் கேட்கவில்லை போலும்!

அண்ணாவை அவசர அவசரமாக விடுதலை செய்ததற்கு அடிப்படையான காரணம் ஒன்று இருக்கிறது. அதாவது, உயர் நீதி மன்றத்திலிருந்து மேலும் ஒரு நற்காட்சிப் பத்திரம் தனக்குக் கிடைக்கக்கூடாது என்பதுதான் சரிக்காரின் கவலை.

* * *

வகுப்பு துவேஷத்தை மூட்டுகிறது 'திராவிடநாடு' இதழ் என்று, 'ஆழ்ந்தஆராய்ச்சிக்கு'ப் பிறகு 8000 ரூபாய் பாதுகாப்புத் தொகையாகக் கேட்டது சென்னை சர்க்கார் தொகையையும் கட்டிவிட்டு, உயர் நீதி மன்றத்தில் சர்க்கார் உத்தரவை எதிர்த்து வழக்கும் தொடரப் பட்டது

சர்க்கார் முகத்திலே கரிபூசப் பட்டது.

ஆளவந்தார்கள் 'ஆழ்ந்த ஆராய்ச்சி'த் திறனுக்கு ஓர் நற்சாட்சிப் பத்திரம் தரப்பட்டது.

'திராவிட நாடு' நிரபராதி என்பது மெய்ப்பிக்கப் பட்டது.

3000 ரூபாயும் திருப்பித்தரப் பட்டது.

* * *

அறிஞர் அண்ணா அவ்வப் பொழுது பத்திரிகையில் எழுதி வந்த கட்டுரைகளைத் தொகுத்து, 'இலட்சிய வரலாறு' என்ற நூல் வடிவில் வெளியிடப்பட்டது.

அந்நூலும் தடுக்கப்பட்டு, 'ஆழ்ந்து ஆராய்ச்சி' செய்து அந்நூலின் ஆசிரியரான அண்ணா மீது வழக்குத் தொடக்கப்பட்டது.

சர்க்கார் தோற்றது.

மற்றுமோர் நற்சாட்சிப் பத்திரம் தரப்பட்டது சர்க்காரின் சிந்தனா சக்திக்கு.

அண்ணாவின் சேவை களங்கமற்றது என்று உறுதி செய்யப் பட்டது.

* * *

'கருஞ்சட்டை ஒழியவேண்டுமா?' என்ற நூலையும் 'ஆழ்ந்த ஆராய்ச்சிக்கு'ப் பிறகு சர்க்கார் தடை செய்தது. அதன் ஆசிரியரான புலவர் செல்வராஜ் அவர்கள் மீது வழக்குத் தொடர்ந்தது.

இதிலும் சர்க்காருக்குத் தோல்வி கிடைத்தது.

மூன்றும் முறையாக நற்சாட்சிப்பத்திரம் ஒன்றை பெற்றுக் கொண்டது சர்க்கார்.

ஆசிரியரும் குற்றமற்றவராக வெளிவந்தார்.

* * *

'ஆரியமாயை' வழக்கில் கீழ் நீதி மன்றத்தில் கிடைத்தத் தீர்ப்பை எதிர்த்து, அண்ணா உயர் நீதி மன்றத்தில் வழக்குத் தொடுப்பார் என்று எதிர்பார்த்திருந்தது சர்க்கார். சர்க்காரின் நினைப்புக்குமாறாக அண்ணா

[19-ம் பக்கம் பார்க்க]

(9-ம் பக்கத் தொடர்ச்சி)
நீண்டகால பழக்கமும்—போதனையும்.

குடும்பத் துன்பம் நாளுக்கு நாள் கூடுகிறது. கந்தனால் தாங்கிக் கொள்ளமுடியவில்லை துக்கத்தை! விடுதலை பெறும் நினைப்பு வேகமாக வேலை செய்கிறது. முடிவுகாணும் ஆசை அதிகரிக்கிறது கந்தனுக்கு.

பாபம்—புண்ணியம் — பெற்றோர்—பாவை—மக்கள் - மாறி மாறித் தோன்றி மறைகிறார்கள் கந்தன் மனத்தில். புயல் வீசுகிறது தெளிவு பிறக்கவில்லை. குழப்பத்திற்கு மேல் குழப்பம் இடிமின்னல் எனக் கந்தனைத் தாக்குகிறது.

இறந்தகாலம் எழுகிறது—எதிர்காலம் தலை சாய்கிறது. கந்தன் தற்கொலையில் விடுதலை தேடுகிறான். கந்தன் பிணம் மறுநாள் காலை குளத்திலே மிதக்கிறது. கந்தன் குடும்பம் சோ வெனக்கதறுகிறது.

சமுதாயம் அப்படியே இருக்கிறது. மிராசுதார் எப்பொழுதும்போல் உல்லாச புரியில் உலாவி வருகிறார். கந்தன் குடும்பங்கள் எப்பொழுதும் போல் வறுமையோடும் வாட்டத்தோடும் வாழ்கிறார்கள்.

கந்தனின் விடுதலைமுயற்சி வேறுபக்கம் திரும்பி இருந்தால், முடிவு எப்படி இருந்து இருக்கும்? மிராசுதார் மறைந்திருப்பார். மிராசு முறைமாறி இருக்கும். கந்தனின் உழைப்பினால் உருவான முழுப்பலனும் கந்தனை வந்து அடைந்திருக்கும். கந்தன் பொத்தல் குடிசை புதுப்பிக்கப் பட்டு இருக்கும். விளக்கொளி வீசி இருக்கும். இல்லாமை அகன்று இருக்கும். புதுவாழ்வு பூத்து இருக்கும். புதுநிலை பிறந்திருக்கும். நிலைக்கேற்ற வண்ணம் புத்தம் புதிய நினைப்பும் தோன்றி இருக்கும். நாடு வளர்ந்திருக்கும் வளத்தோடு.

கந்தனின் தற்கொலை, நாட்டின் இவ்வளவு முன்னேற்றத்தையும் கெடுத்துவிட்டது. வளர்ச்சி தடுக்கப்பட்டுவிட்டது. சிந்தனைக்குத் தடை விதிக்கும் சென்ற காலபோதனை, கந்தனை மட்டுமல்ல, நாட்டுமக்கள் அனைவரையுமே சாக்காட்டை நோக்கி விரைந்துசெல்ல ஊக்கிக் கொண்டு இருக்கிறது.

நாடுவளம்பெற, நாட்டுமக்கள் அனைவரும் நலம்பெற, சுகவாழ்வின் சுவை தெரிந்தோர் கட்டிவிட்ட இறந்தகால கோட்பாடுகள் அனைத்தையும், ஆழக் குழி தோண்டிப் புதைத்தாக வேண்டும். இதுவே நாட்டு மக்கள் முன்னேற்றம் வேண்டுவோர் மேற்கொள்ள வேண்டிய பணி. இதுவே, இன்றைய தேவை.

தான் விடுதலை பெறுவதன் மூலம் நாட்டு மக்களில் பெரும் பாலோரை விடுதலை செய்யக் கடமைப் பட்டிருக்கிற கந்தன், சதிகாரர்களால் தோற்றுவிக்கப் பட்டிருக்கிற சங்கடம்தரும் தத்துவப் பொறியில் சிக்கிக் கிடந்ததால், அக்கிரமத்துக்கு அவன் தலை வணங்கி விட்டான். தற்கொலையிலே அவன் சுகம் தேடிக் கொண்டான். அவனை நம்பிக்கிடந்த அவன் குடும்பத்தினரை அகதிகளாக அலைய விட்டு விட்டான். அவன் செயல் வெறுக்கத் தக்கது. நாட்டுக்குக் கேடுவிளைவிக்கக் கூடியது.

* * *

கந்தன் மூத்த மகன் ஆறுமுகம், தகப்பன் செய்துவந்த தொழிலிலே வெறுப்புக் கொண்டு, வேறு வேலை தேடி, நகரத்தை நோக்கி ஓடிவருகிறான். நகரத்திலே உள்ள பஞ்சாலையிலே பயிற்சி பெறுகிறான். மாற்றம் ஏற்படுகிறது. பழைய போக்கு மறைந்து புதிய போக்கு உருவெடுக்கிறது சிந்தனை செயல் அனைத்திலும் வேறு வேறான நிலை பிறக்கிறது. ஆலைத் தொழிலாளி ஆறுமுகம் ஆகிறான் கழனியே கதியெனக் கட்டி அழுது கொண்டிருந்த கந்தனின் முதல் மகன்.

தகப்பன் வாழ்வைவிட, மகன் ஆறுமுகத்தின் வாழ்வில் புதுகளை தோன்றுகிறது. சிந்தனைப் பண்பும் சிறு அளவில் வேலை செய்ய ஆரம்பிக்கிறது. அச்சம் குறைகிறது. வாழ்க்கையின் சுவை தெரிகிறது வாழ வேண்டும் என்ற ஆசை அதிகரிக்கிறது. அதற்கான விலைகொடுக்கவும் உறுதி உண்டாகிறது. தன் தகப்பனைப்போல் தனித்து நில்லாமல், ஆறுமுகம், பலஆறுமுகங்களுடன் ஒன்று சேர்ந்து புதுப் பலம் பெறுகிறான். போர்க்குணம் வளருகிறது.

ஆலை அரசரின் தொப்பை விரிவது, தன் வர்க்கம் தினம் தினம் சிந்திவரும் வியர்வையின் விளைவு என்பதை ஆறுமுகம், அனுபவத்தால் அறிந்து கொள்ளுகிறான் தங்கள் உழைப்பின் பெரிய அளவு, ஆலை அரசரால் சுரண்டப்படுவதை, ஆறுமுகத்தின் வர்க்கம், ஐயத்திற்கு இடமின்றி விளங்கிக் கொள்ளுகிறது.

விடுதலை முழக்கம் எழுகிறது.

போர்க்கொடி உயர்த்தப் படுகிறது.

சட்டம் ஆலை அரசுக்குத் துணை நிற்கிறது.

சர்க்கார் ஆலை அரசின் ஏவல் வழி ஆடுகிறது.

தியாகத்தின் சின்னங்களாகத் தொழிலாளர்கள் மாறுகிறார்கள்.

சர்க்காரின் கரங்களில் இரத்தக்கறை படிகிறது.

உரிமைப் போர்க்களத்தைப் பாட்டாளிகளின் பிணங்கள் நிரப்புகின்றன.

ஆலை அரசுகளின் அடிப்படை ஆட்டம் கொடுக்கத் தொடங்குகிறது.

தொழிலாளர்களின் முதல் தாக்குதலை, ஏதோ ஓர் அளவில் சமாளித்துக் கொள்ளுகின்றன ஆலை அரசுகள்.

இரண்டாம் மூன்றும் தாக்குதல்களில் ஆலை அரசு சரிந்து சாய்கிறது, சூறாவளியில் சிக்கின மரக்கிளைகள் முறிவது போல்

புதுயுகம் பிறக்கிறது. சுரண்டல் சாகிறது. அந்தச் சொல்லே அகராதியிலிருந்து அகற்றப் படுகிறது. 'வறுமை—இல்லாமை' என்ற இரு சொற்களுக்கும் அதேகதி.

புதிய சமுதாயம்—புதிய மக்களைக் கொண்டது.

* * *

படித்துப் பட்டம் பெற்றவன் தான் பரந்தாமன். பணிமனை பலவற்றிலும், தினம்தினம், ஏறிஏறி இறங்குகிறான் வேலை கேட்டு. தனது அந்தஸ்துக் கேற்ற தொழில்கூட கேட்கவில்லை பரந்தாமன், எடுபிடி போன்ற எந்தப் பணி கிடைத்தாலும் செய்வதென்ற முடிவோடுதான் அவன் வேலை தேடி அலைந்தான் அலைந்ததுதான் மிச்சமாயிற்று.

தான் பிறந்த சமூகத்தைப் பழிக்கிறான், பெற்ற கல்வியை நிந்திக்கிறான். பலகாலம் பழகிய நண்பர்களைத் தூற்றுகிறான். எதைச் செய்தும் பரந்தாமன், பணியொன்றும் கிடைக்காமல், பலர் நகைக்கத் தக்க நிலையிலே வாழவேண்டியவனுனன்.

எல்லா முயற்சியும் தோற்று விடவே, சமூகம் அவனுக்குத் துணைசெய்ய முன் வராமல் போகவே, பரந்தாமன், கடைசியில் ஓர்நாள் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்படுகிறான்.

பரந்தாமன் செய்த குற்றம், புகைவண்டி நிலயத்தில், வழிப்போக்கன் ஒருவனின் பெட்டியைக் களவாடினதுதான்.

குற்றத்தைப் பரந்தாமன் மறுத்துக் கூறவில்லை. நீதிபதியும், நியாயவாதியும் கேட்ட கேள்விக்கெல்லாம் கன்னத்தில் அறைந்ததுபோல் கணீர் கணீர் என்று பரந்தாமன் பதில் கொடுக்கிறான்.

"பெட்டியைத் திருடினுயா?"

"திருடினேன்!"

"ஏன் திருடினுய்?"

"பசி என்னைத் திருடனுக்கிற்று!"

"பிறர் பொருளைக் களவாடுவது சட்டப்படி குற்றமல்லவா?"

"இன்றுள்ள சட்டப்படி குற்றம்தான். ஆனல், எனக்கு இருந்த பசி, அதைப் போக்கிக் கொள்ள நான் எடுத்துக் கொண்ட முயற்சிகள் அனைத்தும் தோற்றுவிடவே, திருடிப் பிழைப்பதைத் தவிர வேறு வழி இல்லை என்ற முடிவிற்கு வந்தேன். பெட்டியைக் களவாடும் முன்பு, என் உள்ளத்தில் எழுந்த சூறாவளியை நீங்கள் அறியமாட்டீர்கள். இன்னும் அந்தக் கொந்தளிப்பு அடங்கி விடவில்லை."

"குற்றவாளி என்பதை நீ ஒத்துக்கொள்ளுகிறாயா?"

"திருடினேன் என்பதை மறுக்காமல் ஏற்றுக்கொள்ளுகிறேன். ஆனல் நான் ஒரு குற்றவாளி என்பதை ஒருக்காலும் ஒத்துக்கொள்ள முடியாது!"

"ஏன்?"

"நான்கு பேரைப் போல், நாணயமான முறையில் வாழ்க்கையை நடத்த, நாய்போல் அலைந்தேன் வேலை தேடி. ஒருவரும் வேலை கொடுத்துக் காப்பாற்ற முன்வரவில்லை. மானத்தைத் துறக்கச் செய்தது என் பசி. பிச்சை எடுக்க முனைந்தேன். சமூகம் என்னை பரிகாசமாகப் பார்த்தது. சீறி விழுந்தது. சீற்றம் கொண்டது. தூற்றியது. 'உலக்கை போல் இருக்கிறுயே உழைத்துப் பிழைக்கக் கூடாதா' என்று உறுமியது. கேள்வி கேட்டதேயன்றி, தொழில் ஏதாவது செய்யச் சொல்லிஎன்பசிப்பிணியைப் போக்க முன்வரவில்லை."

"எனவே திருட்டுத் தொழிலை மேற் கொண்டீர்!"

"அவசரப்படாதீர் அறக்காப்பாளர்களே! இந்த அபாக்யவானின் அவதியை இன்னும் கொஞ்சம் கேட்கப் பொறுமை காட்டுங்கள்! நான் பிறந்த சமூகம் என்னைக் காப்பாற்ற மறந்து விட்டது. என்னைப்பற்றி அதற்குத் துளியும் கவலை இல்லை. எனவே, சமூகத்தைப் பழிவாங்குவது என்ற தீர்மானத்துக்கு வந்தேன். தீர்மானத்தைச் செயலில் நிறைவேற்றினேன். குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப் பட்டு இருக்கிறேன். நீங்கள் கடமையைச் செய்யத் துடித்துக்கொண்டு இருக்கிறீர்கள். சட்டபுத்தகங்களைத் துருவித் துருவி ஆராய்ந்துகொண்டு இருக்கிறீர்கள் என் குற்றத்திற்கு எந்தவித தண்டனையைக் கொடுப்பது என்று."

"வேலைதேடி, பல்லெல்லாம் தெரியக்காட்டி, நான் நடந்து கொண்ட முறையைப் பார்த்து, என் முகத்தில் வீசப்பட்ட கடுஞ்சொற்களைக் காட்டிலும், பிச்சைபுகுந்தபோது என்னை நோக்கிவந்த கேலி வார்த்தைகளைக் காட்டிலும், அறக்காப்பாளர்களாகிய நீங்கள் என்னை நோக்கி எறியும் ஏளனச் சொற்கள், குறைந்த அளவுவேதனையையே எனக்குக் கொடுக்கின்றன. படித்த ஒரு வாலிபனின் எதிர்கால வாழ்க்கையை இந்தச் சமூகம் களவாடிக்கொண்டே இருக்கிறது. மாபாதகம் நாள்தோறும் புரிந்து கொண்

டே இருக்கிறது. கண்ணியமாக வாழ்க்கையை நடத்த வேண்டும் என்ற என் ஆசையை நிறைவேற விடாமல் மட்டந் தட்டி, முடிவில் என்னை ஓர் கள்வனாக மாற்றிவிட்டு, குற்றவாளிக் கூண்டிலும் கொண்டு வந்து நிறுத்தி இருக்கும், இந்தக் கள்ளச் சமுதாயத்துக்குத் தண்டனை தரவோ, அறவுரை தரவோ, அறக்காப்பாளர்களாகிய உங்களுக்கு, ஆற்றலும் கிடையாது, அதிகாரமும் கிடையாது, அதற்கான விதிகளும் சட்டப்புத்தகத்தில்கிடையா. என்னைக் குற்றவாளியாக்கிய சமுதாய அமைப்பை அடியோடு மாற்றி அமைத்தால் அன்றி, பரந்தாமர்கள் தோன்றுவதைத் தடுத்துவிட முடியாது. தண்டிக்கத் தகுந்தவன் ஒரு பரந்தாமன் தான் என்று எண்ணிவிடாதீர்கள், பல்லாயிரக் கணக்கில் பரந்தாமர்கள் சட்ட வரம்புக்குள் அகப்படாமல் சமூகத்தைச் சீரழித்து வருகிறார்கள். அவர்களைத் தேடிப் பிடித்துத் துருப்பிடித்த சட்டத்தைக் காட்டி, அவர்களைத் தண்டிப்பதைக் காட்டிலும், பரந்தாமர்களைத் தோற்றுவித்துக் கொண்டே இருக்கும் சமூக ஏற்பாட்டை, உங்களால் முடியுமானால் மாற்றி அமையுங்கள். அப்பொழுதுதான் என் போன்ற பரந்தாமர்கள் தோன்றாமல் இருப்பார்கள்.''

"போதும் போதனை! ஆறு மாதம் சிறைத்தண்டனை; அதன் பிறகு ஓராண்டு நன்னடத்தைக் காகக் கண்காணிப்பு!" என்று தீர்ப்பளித்தார் நீதிபதி.

"சிறையிலே, உழைப்பும் உண்டு—சோறும் உண்டு! வேலை தேடி அலையவேண்டிய வேதனை இருக்காது! பிச்சை எடுத்தாக வேண்டும் என்ற கேவலம் இருக்காது! நாட்டிலே காணப்படும் சமூக அமைப்பைக் காட்டிலும், சிறைச்சாலையிலே காணப்படும் சமூக ஏற்பாட்டில் சங்கடம் குறைவு! சுரண்டப்படுபவர்களும் அங்கு கிடையாது—சுரண்டுகிறவர்களும் அங்கு இல்லை! நாட்டிலே உள்ள நல்லவர்களின் சமுதாய ஏற்பாட்டிலும், சிறைச்சாலையில் உள்ள குற்றவாளிகளிடம் காணப்படும் சமுதாய அமைப்பு ஆயிரம் மடங்குசிறப்பானது!''

* * *

கற்பகம், நல்ல பெயர்தான். தான் ஒரு கொலையாளியாக மாறவேண்டிய கட்டாயம் ஏற்படும் என்பதை அவளும் நினைத்துப் பார்த்ததில்லை — அவளுடைய பெற்றோர்களும் கனவு கூட கண்டதில்லை.

செல்வத்திலே பிறந்து, செல்வத்திலே வளர்ந்து, இரண்டு குழந்தைகளுக்குத் தாயாகிற வரையில் செல்வச் சிறப்புடன் வளர்ந்தவள்தான் கற்பகம். எப்படியோ செல்வம் வேறு கைக்குச் சென்றுவிட்டது. வறுமை கற்பகத்தைத் தீண்டி விட்டது.

கற்பகத்தை, அவளுக்கு இருந்த செல்வத்துக்காகவே மணந்துகொண்ட கந்தன், இல்லாமை கற்பகத்தைத் தீண்டிய உடன், கற்பகத்தைத் துன்புறுத்தத் தொடங்கினான்.

கற்பகம், கடவுளை நொந்து கொண்டதுண்டு. கணவன் காணக் கண்ணீர் சிந்தியதுண்டு. குழந்தைகள் முகம் பாருங்கள் என்று கெஞ்சியதுண்டு. கணவன் மனம் கற்பாறையாகவே இருந்துவிட்டது.

கற்பகத்தின் அந்தஸ்து கண்டு அன்பு உரை புகன்ற வாய் இழித்துப் பேச முனைந்தது; அணைத்த கை அடித்து இம்சிக்கும் உலக்கையாக மாறி விட்டது. கற்பகத்தின் துன்பமும் துக்கமும் நாளுக்கு நாள் கூடிற்றேயன்றி குறைந்தபாடு இல்லை.

கற்பகம், கணவனின் கொடுமையைக் கண்டு கோபிக்கவில்லை. எதிர்த்து வாயாடவில்லை. இதமாகப் பேசிப்பேசி ஏமாற்றத்தைப் பரிசாகப் பெற்றாள்.

கணவனின் போக்கிரித்தனத்துக் கெல்லாம், பொறுமை காட்டினாள் கற்பகம். கணவன் மிருகத்தனமாக நடந்து கொண்ட போதெல்லாம், சகிப்புத்தன்மையோடுதான் நடந்து கொண்டாள் கற்பகம். கற்பகம் எவ்வளவு பொறுமை காட்டியும் சகிப்புத்தன்மையைக்காட்டியும், கணவன் என்னும் காண்டா மிருகத்தின் போக்கில் மாற்றமில்லை.

இருந்தாற்போல் இருந்து ஒரு நாள், கற்பகத்தை இரண்டு குழந்தைகளுடன், இழுத்து வந்து வெளியே விட்டு விட்டு, தெருக்கதவைத் தாழ்ப்பாள் போட்டுக் கொண்டு போய் விட்டான் கணவன் எனும் காட்டு மிருகம்.

வேறொருவரின் வீட்டு வேலைக்காரியாகிறாள் கற்பகம். கண்ணும் கருத்துமாகத்தான் வேலைசெய்து வருகிறாள். இருந்தாலும், வீட்டுக் குடையாரின் வசை குறைவது கிடையாது.

கணவனின் வசவைத் தாங்கித் தாங்கித் தோல் தடிப்பேறி

அண்ணாவின் அரிய நூல்கள்

ஜனநாயகம்	0	2	0
அண்ணாவின் சொல்வன்மை	0	5	0
அண்ணாவின் உவமைகள்	0	8	0
விதிக்கு அடிமைத்தனம்	0	2	0
வீட்டிற்கோர் புத்தக சாலை	0	2	0
மேடைப் பேச்சு	0	1	6
தோழமையா? விரோதமா?	0	4	0

வியாபாரிகளுக்கு 25% கமிஷன்

மறுமலர்ச்சி நூல் நிலையம்,

18, ஆயனூர் முத்தையா முதலி தெரு, சென்னை 1.

விட்ட கற்பகத்துக்கு, பிறரின் வசவு அவ்வளவு பெரிதாகத் தெரியவில்லை. மேலும் இரு குழந்தைகளைக் காப்பாற்ற வேண்டுமே என்ற எண்ணம், யார் எவ்வளவு தூற்றினாலும் தாங்கிக் கொள்ளவேண்டும் என்ற துணிவைக் கற்பகத்துக்குக் கொடுத்தது.

ஒரே ஒரு வீட்டில் வேலை செய்து, அதனால் வரும் ஊதியத்தைக் கொண்டு, தானும் உயிர் வாழ்ந்து, தனது இரு குழந்தைகளையும் போஷித்து வளர்க்க கற்பகத்தால் முடியவில்லை. குழந்தைகள் இளைக்கின்றன. கற்பகத்தால், அதனைக் காண சகிக்கவில்லை. பெற்ற வயிறு பற்றி எரிகிறது.

ஒரு நாள் கோயில் கிணற்றிலே ஒரு யுவதியின் பிணமும், இருகுழந்தைகளின் பிணங்களும் மிதக்கின்றன. கற்பகமும் அவளுடைய இரு குழந்தைகளும்தான் அப்பிணங்கள். இல்லாமை-பசி—பலிவாங்கிக்கொண்டது மூன்று உயிர்களை.

* * *

பார்வதி, ஓர் ஏழைப் பெண். பூப்படைந்த உடனே மணமாகி புருஷன் சுகத்தைப் பூரணமாகப் பெறுவதற்குள் விதவையாகி விட்டாள் அபாக்யவதி பார்வதி.

இளமை, விதவை பார்வதியின் அங்கங்கள் அனைத்திலும் கூத்தாடிக்கொண்டு இருந்ததால், அவளை எவர் வீட்டிலும் எடுபிடியாக ஏற்றுக் கொள்ளத் தயக்கம் காட்டினார்கள்.

ஒரு நாள் இரண்டு நாள் பட்டினி கிடக்கலாம் என்றென்றைக்குமா பட்டினி கிடக்க முடியும் ஒருத்தியால்?

காளைகளின் கண்ணடிகளால் தாக்கப்பட்டாள் பார்வதி. விதவை விபசாரியானாள். வெண்கலச் சிலைபோல் இருந்த விதவை, வியாதிகள் பலமலிந்த எலும்புக் கூடானாள். பார்வதி, பலருக்குக் காட்சிப் பொருளாக இருந்த கட்டழகி, பலரால் காரித்துப்பும் கன்றாவியாக மாறிவிட்டாள்.

வாலிபர்கள் வெறுத்தொதுங்கினர் பார்வதியைவிட்டு. போக்கிரி ஒருவனின் பாதுகாப்பைப் புகலாகக் கொண்டாள் பார்வதி முடிவில்.

கருணையின் வடிவாகத்தான், அவனும் இவ்வுலகில் வாழ்க்கையைத் தொடங்கினான். அவன் பெற்ற அனுபவம், அவனை ஓர் முதல்தரமான கொடியவனாக மாற்றிவிட்டது. மனித உருவிலே நடமாடும் விலங்கு என்றுதான், அவனைக் காண்பவர்கள் அனைவரும் கூறுவது வழக்கமாகிவிட்டது.

தீரா வியாதிகளின் இருப்பிடமாகப் பார்வதி தோற்றம் பெற்றுவிட்டபிறகுதான், அந்தப் போக்கிரியின் பாதுகாப்பு அவளுக்குக் கிடைத்தது. அவள் ஏவல் வழி ஆடினாள். பார்வதி கடுவன் ஆனாள்; அவன் ஆட்டிப்படைக்கும் குரங்காட்டி ஆனான்.

போக்கிரிக்குப் பொருளீட்டித்தரும் தொழில் சாதனம் ஆனாள் பார்வதி. தப்பித்தவறி தன்னை நாடிவரும் வாலிபர்களிடம் பொருள்பறித்து, அப்பொருளை போக்கிரியின் கையில் ஒப்படைத்து, அவனுடைய அக்கிரம வாழ்க்கைக்கு உதவி புரிந்துவந்தாள் பார்வதி.

பணம்கொடுக்கப் பார்வதியால் ஒருநாள் முடியாமற்போனாலும், போக்கிரி, தன் பெயரை மெய்ப்பித்துக்காட்ட முனைந்துவிடுவான். போக்கிரியின் கை, கால், பற்கள், நகங்கள், அனைத்தும் பார்வதியின் உருவத்தை சீரழிக்கத் தொடங்கிவிடும்.

போக்கிரியுடன் காலம் கழிப்பதும் கஷ்டமாயிற்று. விட்டுப் பிரிந்து செல்வதென்பதும் பயத்தைத் தரக்கூடியதாக இருந்தது பார்வதிக்கு.

கயவனின் மூர்க்கத்தனமான தாக்குதலுக்கு உள்ளான பார்வதி, விளக்கு வைக்கும் நேரத்தில் வீதிவழியே வந்துகொண்டிருந்த ஏழுவயது சிறுமியின் கழுத்தில் இருந்த பொன் சங்கிலியை, களவாட வேண்டுமென்ற கருத்தோடு, சிறுமிக்குத் தின்பண்டங்கள் வாங்கிக்கொடுத்து, அன்புரை பல புகன்று, தனிமையான இடத்துக்கு அழைத்துச் சென்றாள் சிறுமியை, பார்வதி, கழுத்தை அழுத்திக்கொன்றாள். சங்கிலியைக் களவாடிக் கொண்டு மறைந்தாள்.

திருடின சங்கிலியின் தன்மையை அறியாது, விற்கச் சென்ற இடத்தில், பொன்மயமாக இருந்த சங்கலி, பித்தளை என்று வெளியாகவே, பார்வதியின் கைகளில் இரும்பு விலங்கு பூட்டப்படுகிறது.

கொலை—களவு — ஏமாற்றல் —இவ்வளவு குற்றங்களையும் பார்வதி செய்தாள் என்று தண்டிக்கப்படுகிறாள்.

பசி, பார்வதியை விபசாரியாக்கிற்று. கொடிய வியாதிகளின் இருப்பிடமாக்கிற்று. போக்கிரிக்குப் பயந்து நடக்க வைத்தது; கொலைகாரி பாக்-

(18-ம் பக்கம் பார்க்க)

ஒழிக வகுப்புவாதம்

அறிஞர் கா. அப்பாதுரை M.A.L.T. எழுதியது

'வகுப்புவாதம் ஒழிய வகுப்புவாதமே சிறந்தது என்று விளக்குகிறார் ஆசிரியர்'

விலை அணா 4.

C. R. சேகர்,

28, கெனல் தெரு,
திருவல்லிக்கேணி.

தமிழ் இலக்கியம்

புலவர் வண்டார் குழலி

மக்களுக்குப் பிறப்பிலேயே தாய் மொழி யறிவில்லை. தாய மொழியை அறிந்துகொள்ளும் திறமை பட்டுமே உண்டு. ஓராண்டுக் குழந்தை 'அம்மா', 'அப்பா', 'பாச்சி', 'சோச்சி' (பால்—சோறு) எனும் பெயர்களையும், பின்னர் வா, போ என்ற வினைகளையும், பின்பு கருத்துக்கேற்ற சொற்களையும் சொல்லக் கற்றுக்கொள்ளுகிறது. நாளடைவில் பலவித பொருள்களையும், செயல்களையும் உணர்ந்து கொள்கிறது. பல பொருள்களையும், சொற்களையும், கருத்துக்களையும் புதிது, புதிதாக அறிந்து, இளம்பருவம் கடந்து—அஃதாவது குழந்தை இளைஞனாகிறது.

இதன் பின்னர், மாந்தன் பழக்க, வழக்க, ஒழுக்கங்களில் ஈடுபடுகிறான். தான் மட்டிலும் அறிந்ததைப் பிறரும் அறிந்து நலமெய்த வேண்டும் என்ற எண்ணம், தோன்றிய உடனேயோ, அல்லது பிறர் அறிந்து அதன்படி நடந்தால் அந்தக் கட்டுப்பாட்டினால் தனக்கு நன்மை கிடைக்கும் என்ற நரிக்குணத்தினாலேயோ உரைநடை (வசனம்) யாகவும், செய்யுளாகவும் நூற்களெழுதினன். உரை நடைப் பகுதிகள் மனப்பாடம் செய்யவசதியின்மையால், இன வெழுத்துக்களை அழகுற நிறுத்தி எதுகை, மோனையுடன் பாட்டுக்களாக இணைத்தார்கள்.

உரைநடைப் பகுதியின் அடுத்த நிலைப்பாட்டு ஆசிரியப்பா, அகவல் என்பதாகும். வெண்பா, வஞ்சிப்பா, கலிப்பா ஆகியவைகள் பிற்காலத்தன. இந்நிலையில் ஒருவர் எழுதியனவோ, பல்லோர் பகன்றனவோ பாக்களாலியன்ற நூற்களாயின. அவைகள் அகம், புறம் என இரு பகுதிப்படும் ஆண், பெண் இருவர் சேர்ந்து நடாத்தும் வாழ்க்கையில் பெண்ணின் சிறப்பு, அவளால் ஆகும் இன்பம், துன்பம் போன்ற கணவன் மனைவிக்குள் நிகழ வேண்டியன அகம் என்றும், இதற்கு மாறுபட்டனவெல்லாம் புறமென்றும் பெயர்படும். எல்லோர்க்கும் நல்லின்பம் அறமென்றும், அல்லாப் பகுதி மறமென்றும் கூறப்பட்டது. இதுபோன்ற நூற்களின் தொகுப்பே இலக்கியம் எனப்படும்.

இலக்கியம் என்ற சொல், அழகிய தூய தமிழ்ச் சொல்லாகும். இஃது 'இலக்கி' என்னும் பகுதியடியாகப் பிறந்து, 'இயம்' என்னும் ஈறு பெற்ற சொல்லாகும். (இது இலட்சியம் என்ற வடசொல்லென்பார் வடமொழியாளர்கள்.) தமிழ்ச் சொற்களையெல்லாம் வட சொல் என ஒதுக்கும் ஒரு சிலர், இச்சொல்லையும் வட சொல் என்பது யாங்ஙனம் பொருந்தும்? 'தமிழக' என்ற வட சொல்லின் திரிபே தமிழ் எனின் ஆம் என ஒப்புவர் போலும் இவர்கள் "விழித்தோரோ நிலைகாண்பார் விதைத்தோரே அறுத்தெடுப்பர்." என்ற புரட்சிக் கவிஞரின் புதுநினைவை இவர்கள் நினைவிலிருத்த வேண்டும்.

முன்னுள் அறிஞர்களை விட, இற்றை நாள் அறிஞர் சிறந்தோர் எனக்கொள்ளல் வேண்டும். முன்னைய காலம் இலக்கியத்தைக் கொண்டுதான் நாகரீகத்தை நிலை நிறுத்த நினைத்த காலம். இலக்கணத்தைக் கொண்டே நாகரீக எழுச்சியினை பரப்பி வரும் காலமிது. ஆதலால அந்தக் காலம் இலக்கிய இலக்கணத்தைத் தமிழாசிரியர் நெட்டுருச் செய்த காலம். பிற நாட்டு இலக்கிய, இலக்கணத்தோடு இன்று தமிழை ஒப்ப நோக்கி ஊன்றிக் கற்கும் காலம் ஆகலான் என்க

வருங்கால மனிதர்களுக்கு, இறந்தகால அறிஞர் எழுதி வைத்த வாழ்க்கைக் குறிப்புகள் இலக்கியம் என்பனவாகும்.

இலக்கியம் காலக் கண்ணாடி. வாழ்க்கையின் வரம்பு. மக்களின் நாகரீகமுணர்த்தும் பொற்பெட்டகம். மக்கள் நடந்து கொள்ளவேண்டிய இயற்கைச் சட்டம்.'

தமிழ் இலக்கியத்தை இயல், இசை, நாடகம் என முப்பகுதியாக்கி முத்தமிழ் என்றனர். இயல்பாக உரை நடை போன்றது இயற்றமிழ். இசை, நாடகத் தமிழிற்கு முன் தோன்றியதால், இயற்றமிழ்முன் கூறப்பட்டது. இசை, நாடகம் இவற்றின் உயிர் இயற்றமிழ்.

பண்ணோடும், தாளத்தோடும் சேர்ந்தது இசைத்தமிழ். உரை நடைப் பாட்டு, இதற்குத் தகுந்த மெய்ப்பாடு இவைகளோடு இயன்றது நாடகத் தமிழ். பழந்தமிழ் இலக்கியங்கள் எத்துணையோ அழிந்து பட்டன. இன்றைய நச்சுக் கொள்கைகளில்லாத தமிழர் பண்பாடுகளை, சங்க இலக்கியங்களிலே (எட்டுத்தொகை, பத்துப் பாட்டு, குறள் ஆகிய இவை

களில் காணலாம்.) கடைச் சங்கப் பிற்காலத்திலே ஐம்பெருங்காவியங்கள் சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி போன்றனவும், நீலகேசி, சூளாமணி, யசோதர காவியம், நாக்குமாரகாவியம், உதயணன் கதை போன்றஐஞ்சிறு காவியங்களும், திருவாசகம், திருச்சிற்றம்பலக் கோவை போன்றவும், திவாகரம், பிங்கலம் என்ற நிகண்டுகளும், சேர, சோழ, பாண்டியரைப் பாடிய முத்தொள்ளாயிரம் போன்றனவும் ஆக்கப்பட்டன. கடைச்சங்க காலத்தின் பிற்பகுதி கி. பி. 600முதல் கி. பி. 1400-வரை; நம்பியகப்பொருள் கல்லாடம், நன்னூல், நேமி நாதம், வெண்பா மாலை, யாப்பருங்கல விருத்தி, களிகை என்ற நூல்கள் தோன்றின.

கி. பி. 11-ம் நூற்றாண்டில்— கம்பராமாயணம், கோவைகள், உலாக்கள், நளவெண்பா, நல்வழி, நீதி வெண்பா, கலிங்கத்துப் பரணி இவைகள் தோன்றின.

சேனாவரையர், பரிமேலழகர், நச்சினார்க்கினியர், அடியார்க்கு நல்லார் இருந்த காலமுமிதுவே எனலாம்.

கி. பி. 1400க்கு பிற்பட்ட காலம். இக்காலத்தில் நைடதம் பாரதம், திருப்புகழ், திருவிளையாடல் புராணம் முதலிய புராண வகைகளாலும், தாயுமானவர், எல்லப்ப நாவலர், மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம், மாயூரம் வேத நாயகம் பிள்ளை, அண்ணாமலை ரெட்டியார் போன்ற புலவர்களின் இலக்கியகாலம் இன்றைய இலக்கிய ஆசிரியர்களிலே முதற்கண் போற்றப்படுபவர் பாரதியார். பாரதியாருக்கு அடுத்தபடியாகத் தென்னாட்டின் தேவைக்குச் சுடரை ஏற்றும் திரு விளக்கு எங்கள் கவிஞர் பாரதி—தாசனார். அவர்களின் இலக்கியத்தைப் பற்றித் தமிழுலகம் நன்கறியும்.

புறநானூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை இவைகளின் மூலமாக மக்களின் கல்வியறிவு, மாட்சி, காதலின் கனிவு, ஆடவரின் அகவொழுக்கம், கொடை, நாகரீகம், பண்பு இவைகள் புலனாகிறது. இவைகளிற் கூறப்படும் சில வழக்க ஒழுக்கமுறைகள் இக்காலத்திற்குப் பொருந்தாது. எனினும் அக்காலத்தில் வாழ்ந்த செவ்விய தமிழர்களின் நாகரீகம் புலனாகும்.

கடைச்சங்க பிற்கால நூல்களாகிய ஐம்பெரும் காவியங்களில் ஆரிய நாகரிகம் நுழைகிறது எனினும், அவற்றை நீக்கி நாம் நலம் பெறலாகும். தமிழ் மகளிரின் மாண்பினை விளக்கும் மாதவியும், வீரத்தினையும், மானத்தினையும் விளக்கும் கண்ணகியும், மகளிர்க் கனியாம் மணிமேகலையும் மாண்புடைய தமிழியல்பிற்கோர் கலங்கரை விளக்கமாகும்.

பதனோரும் நூற்றாண்டிற்குப் பிற்பட்ட நூல்களில், தமிழர் நாகரீகம் அழிக்கப்படுகிறது. தமிழரின் மாற்றமும், வடவரின் ஏற்றமும் வரையப்படுகின்றன. இனக்கொலை செய்யப்படுகிறது. மகளிரை, நிறைகாக்கும் காப்புடைய நேரிழைபரை நிறையிலார் எனக் கூறப்படுகிறது. தூமகேது எனப்புவி தோன்றிய வாமமேகலைமங்கையர் என மனவடக்கம் என்று மாண்பிலாது கூறப்படுகிறது.

ஐம்புலன்களைப்போல் ஐவனையும் கணவனாகப் பெற்றாலும் இன்னும் வேறொருவனாகிய கர்ணனும் கொழுநன் ஆவதற்கு என் உள்ளம் விரும்புகின்றமையால், அம்புவியில் பெண்ணாகப் பிறந்த எவர்க்கும் ஆடவர் இல்லாவிடில்தான் அருங்கற்பும் நிலை பெறும் என ஆரியநாகரீகத்தின் அநாகரீகம் தமிழருக்கு உயர்வாகக் காட்டப்பட்டது ஒவ்வொரு குலத்திற்கும் ஏற்றம் தரப்பட்டது. கடவுள் என்ற மேற்பூச்சிலே காமரஷம் காவியரஷமாகக்கலந்தளக்கப் பட்டது.

அருமறை திருக்குறள் நெறி அறியமுடியாது கீதைகளின் கிளை வழிகள் காட்டப்பட்டது. சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்ற ஐந்தின்வகையாகத் துய்க்க வேண்டிய உலகின்பம் அற்பம் எனப்பட்டது. சங்கஇலக்கியத்தின் ஏற்றம் தடைப்பட்டது. இயற்கைநான் தமிழர் தொடுத்தபோரின் பயனாக, மறுமலர்ச்சித் தோட்ட உழவர்களின் முயர்சியால் தமிழ்ப்பயிர் செழித்து ஓங்கத் துவங்கிற்று. இன்றைய இலக்கியவானில் ஒளிவிட்டு விளங்கும் சுடர்கவி பாரதிதாசனாரின் இலக்கியம் தமிழர்களின் உயிர் நாடி.

காலத்திற்கும், மக்கள் ஏற்றத்திற்கும் தக்கதாக எவ்வெவைகள் இருக்கின்றனவோ அவ்வகை இலக்கியங்கள் என்றும் அழியாதன. குறள் எத்தனையாயிரம் ஆண்டுகளையும் ஊடுருவிச் செல்லும் ஒளியுடையது. மக்களைத் தவறான வழிக்கு அழைத்துச் செல்பவைகள் அழிக்கப்பட வேண்டியவைகள்.

இராதாமணாளன்
புதிய நூல்கள்

மயானத்தில் முத்தம்	0	8	0
பெண்	0	8	0
பொற்சிலை	1	0	0
இன்பக் கனவு	0	8	0

பகுத்தறிவுப் பாசறை, சென்னை.

(15-ம் பக்கத் தொடர்ச்சி)

கிற்று; திருடியாக்கிற்று; ஏமாற்றுக்காரி யாக்கிற்று; சமுதாய சத்துருவாக்கிற்று.

* * *

மனிதனுக்குப் பசி என்ற ஒன்று மட்டும் இல்லாவிட்டால், அவன் எவ்வளவு உயர்ந்த அறிவியல் பிராணியாக இருப்பான் தெரியுமா?

உலகத்தில் காணப்பெறும் கொலை—கொள்ளை—சூது—சதி—வஞ்சகம் — அழுக்காறு அவா-வெகுளி அனைத்துக்கும் மூலகாரணமாக உள்ளது பசி தான், சில விரும்பத்தகாத நிகழ்ச்சிகளை நாம் காண நேரும் பொழுது, அதற்கான மூலகாரணத்தை நுணுகி ஆராயாமல், துணைக்காரணங்களைக் கொண்டு மட்டும் ஒரு முடிவிற்கு வந்து விடுகிறோம்.

ஏற்கனவே, வாழ வசதி பெற்றுவிட்டோர், அந்த வசதியை பிறர் அபகரித்துக் கொள்ளாமல் காப்பாற்றிக் கொள்ளவும், கடவுள்—மோட்சம்—நரகம்—பாவம்—புண்யம்—என்ற கற்பிதச் சொற்களை, தங்கள் சுய நலத்துக்காக வேலியாக அமைத்துக் கொண்டுள்ளனர். அரசையும் அவர்கள் ஏவல் வழி நிற்கச் செய்கின்றனர். தங்கள் வாழ்விற்கு ஆக்கம் தரும் முறையில் சட்டங்களையும் இயற்றிக் கொள்ளுகின்றனர். போலீஸ் இராணுவ பந்தோபஸ்துகளையும் செய்து கொள்ளுகின்றனர்.

எதை நோக்கினும் இவர்களுக்கு அச்சந்தான். பயமே இவர்கள் எடுத்துக்கொள்ளும் செயல்கள் அனைத்திலும் கலந்து நிற்கும். மக்கள் மூச்சு விட்டாலும், வாயைத் திறந்து கொட்டாவி விட்டாலும், தினவைத் தீர்த்துக் கொள்ளக் கையை உயர்த்தினாலும், நடக்க ஜீவனற்றுத் தளர்ந்து நடந்தாலும், இவ்வளவிலும், இவர்கள் காண்பது புரட்சி மனத்தைத்தான். அச்சம் அந்த அளவுக்கு, அவர்களிடம் குடிகொண்டுபோய் இருக்கிறது.

அச்சம் கூடக்கூட, இவர்களுடைய ஆதிக்கவெறியும் முன்னிலும் பன்மடங்குக் கூடுதலாகும். எந்த மக்கள் சக்தியைக் கண்டு இவர்கள் அஞ்சி அஞ்சிச் சாகிறார்களோ, அதே மக்கள் சக்தியை அடக்கி ஒடுக்கி விடலாம் என்று மனக்கோட்டை கட்டும் அளவிற்குச் சுய நலம் உரம் பெற்றுக் கிடக்கிறது இவர்கள் உள்ளத்தில்.

கூடுமானவரையில், பழைய கோட்பாடுகளைக் கொண்டு, மக்களின் விடுதலை முனைப்பை, உரிமை வேட்கையை ஒழித்துக் கட்ட முனைவர் தொடக்கத்தில். இதுதான் கலாசார போர் முனை. மக்கள் பசியால் புழுப் போல் சாவதையும், பொய்யர்களாவதையும், வஞ்சகர்களாவதையும், கயவர்களாவதையும், காமுகர்களாவதையும், கள்ளர்களாவதையும், கொலைஞர்களாவதையும், இந்தக் கலாசார போதனையால தடுத்து நிறுத்த முடிவதில்லை. அதற்கான சக்தி, அதற்குக் கிடையவும் கிடையாது. செல்வந்தர்களின் செவிலித்தாய் கலாசாரப் பேச்சு! சீமான்களின் கேடயம் கலாசார சலசலப்பு! பணமூட்டைகளின் அப்புறுத் தூணி கலாசார வம்பளப்பு!

புதுவாழ்வு பெற விரும்புவோர் இக்கலாசாரப் போர் முனையில் வெற்றி பெற்றாக வேண்டும். இக்கலாசாரப் பேச்சை செந்தூள் பறக்கச் செய்தாக வேண்டும், புதுயுகம் அமைக்க ஆர்வம் கொள்வோர்.

நிற்க.

* * *

மேலும் மேலும் பொருளீட்டவேண்டும் என்று சீமான் பேராசை கொள்வதும், அதற்காகப் பிறரை வஞ்சிப்பதும், இன்றுள்ள சீர்கெட்ட சமுதாய அமைப்பின் ஆபத்தான விளைவுகள். இல்லாதவன் மேலும் மேலும் வறுமையாளனாக மாறுவதும், வெறுக்கத் தகுந்த பல குற்றங்களைப் புரிவதும், ஒன்றுபட்ட கிளர்ச்சியில் ஈடுபடுவதும், அதே அமைப்பில் மறைந்து கிடக்கும் பண்புகள்.

கேட்டைத் தவிர நலம் தரும் பண்பு துளியும் பெற்றிராத சுரண்டல் சமுதாய அமைப்பை அறவே அகற்றி, அந்த இடத்தில் வேறு ஒரு அமைப்பை ஏற்படுத்தினாலன்றி, நாடும் முன்னேறாது — நாட்டு மக்கள் வாழ்வும் வளம் பெறாது.

* * *

நாசிக் நகரிலே, நாட்டிலே பெரிய கட்சி என்று கித்தாப்புக் கூறிகொள்ளும் காங்கிரஸ் கட்சி—நாடாளும் காங்கிரஸ் கட்சி, மாநாடு கூட்டிற்று. அதன் தலைவர் புருஷோத்தமதாஸ் தாண்டன், திருவாய் மலர்ந்தருளி இருக்கிறார் சில பல. அதிலே ஒன்று, அதிகார தேவதையின் ஆணவக்குரலோடு கிளம்பி இருக்கிறது. அது இது—

“உணவும் உடையும் வேண்டுமென்று நாம் போடுகிற கூச்சலில் நம் அரும்பெரும் தலைவர்களுடைய போதனைகளை நாம் மறந்து விடுகிறோம்.”

“உணவு கிடைக்கவில்லை, உடை கிடைக்கவில்லை என்ற கூக்குரல்களை நாம் அடிக்கடி கேட்கிறோம். ஆனால் நாம் மகாத்மா காந்தியின் தொண்டர்கள் என்பது உண்மையானால், நாம் ஒரு கட்டுப்பாடு உள்ள தேசீய இனம் என்பது உண்மையானால், நாம் முதலில் செய்தாகவேண்டிய வேலை நம்

முடைய ஒழுக்கத்தைப் போற்றி வளர்ப்பதுதான்."

"நம்முடைய தேவைகளுக்கு எல்லாம் இரண்டாவது இடம்தான் உண்டு. நம் நாட்டின் பெருமைக்கும் ஒழுக்கத்திற்கும்தான் முதலிடம் உண்டு."

காலஞ் சென்ற காந்தியடிகளார், 'பட்டினி கிடவுங்கள்—பசித்திக்கிடவுங்கள் - பசிக்கிறது என்று வாய்திறக்காதீர்கள்'—என்று எங்கும், எப்பொழுதும் போதித்ததாக நாம் கண்டதும் இல்லை—கேள்விப் பட்டதும் இல்லை. ஆனால் அவருடைய சீடர் என்று சொல்லிக் கொள்பவர், காந்தியாரின் திருப்பெயரை, தன்னுடைய அதிகார ஆணவ வார்த்தைக்கு உபயோகித்துக் கொள்ள முனைகிறார்.

பசிவந்திட, ஒழுக்கம் மட்டுமல்ல எந்த உயர்ந்த கோட்பாடுகளும் நிலைபெற்று இருக்காது மனிதனிடத்தில்.

உணவு, உடை, உறையுள் ஆக மூன்றும் இன்றியமையாதன உயிர் வாழ்வன அனைத்துக்கும். பிறப்பிலே சிறந்த பிறப்பைப் பெற்றிருக்கும் மனிதனுக்கு இது முக்கியமில்லையாம்,—இந்தி வெறியர் தாண்டன் சித்தாந்தப் படுத்துகிறார். காந்தியாரின் பெயரையும் இதில் இழுத்து, களங்கம் தேடுகிறார் அத்தூயவர் திருநாமத்துக்கு.

பசித்த வயிற்றோடு இருந்துகொண்டு தாண்டன், இந்த அருள் மொழியைக் கூறவில்லை.

திருத்துளாயும், கங்கை நீரும் உட்கொண்டு உயிர் வாழ்ந்து கொண்டு தாண்டன், இந்தக் கருத்துரையைக் கழறவில்லை.

காற்றை மட்டுமே பூசித்துப் பசியாறி, தாண்டன், இந்தப் பொன்னுரையைப் புகலவில்லை.

கவலை கிஞ்சிற்றும் இல்லாமல், காலாகாலத்தில் பழரசத்தோடு பாலும் வயிற்றை நிரப்பிக்கொண்டு, பசி காணாத மேனியோடு தலைமை தாங்கி, தருகிறார், பசித்தவர்களைப் பார்த்து, "கூச்சல் போடாதீர்-கூக்குரல் கிளப்பாதீர்—ஒழுக்கத்தை மறவாதீர்" என்ற பொருந்தா உரையை.

"பசிக்கு இரண்டாம் இடமாம்! ஒழுக்கத்திற்கு முதல் இடமாம்!" தாண்டனின் தர்பாரிலே, நமது மக்கள் பெற இருக்கும் பேறு இதுவானால், நாமும் இவர் ஆட்சியிலே ஒரு குடிமகனாக இருக்கும் இழிநிலை பெற்றிருக்கிறோமே என்றுதான் நாம் ஒவ்வொருவரும் எண்ண வேண்டியவர்களாக இருக்கிறோம்.

பசி, ஒழுக்கத்தை வெகு தொலைவில் ஓட்டிவிடும்.

வயிறு, பசித்திருக்கும் பொழுது போதனையைப் பருகும் சக்தி செவிக்குக் கிடையாது.

பசி, பயங்கரத் தன்மைவாய்ந்தது.

பசி, பாரைக்குலுக்கக் கூடியது.

பசி, புரட்சிக்கு வித்து.

பசி, புத்துலகை அமைக்கும் ஓர் அரிய சக்தி.

ஒழுக்கத்தை முன்தள்ளி பசியைப் பின் தள்ளுவதின் மூலம், தாண்டன், தன்னையும் அறியாமல் புரட்சிக்கு வித்திடுகிறார். பசித்தவர்களுக்குத் தாண்டன் தந்த தருமோபதேசத்தைக் காணிக்கையாக்குகிறோம்.

[11-ம் பக்கத் தொடர்ச்சி].

சிறை புகுந்துவிடவே, சர்க்காருக்கு ஏமாற்றமும் அச்சமும் அதிகரித்து விட்டது.

வரவிருக்கிற தேர்தலையே கருத்தில் வைத்துக் கொண்டு எந்த ஒரு செயலையும் ஆற்றத் துணியும் சர்க்கார், அண்ணாவை சிறையில் அடைத்துவிட்டு, அதனால் ஏற்படும் திராவிட மக்களின் வெறுப்பையும் பகையையும் சம்பாதித்துக் கொள்ள விரும்பவில்லை. எனவே அவசர அவசரமாக, வழக்கைப் பரிசிலனை செய்து பார்த்து, அண்ணாவை விடுதலை செய்துவிட முனைந்துவிட்டது சர்க்கார்.

நீதிமன்றத்திலிருந்து கிடைக்கும் குட்டுகளைக் காட்டிலும், தேர்தலில் உண்டாகும் பலாபலன்களுக்கு ஆளவந்தார்கள் அதிகம் அஞ்சுகிறார்கள். அந்த அச்சமே அண்ணாவை விடுதலை செய்யச் செய்திருக்கிறது. ஆளவந்தார்களை. அதுவே சர்க்காரின் போக்கிற்கு மூலகாரணமாகும்.

ஒரு கல்லில் இரண்டு பட்சிகளை வீழ்த்திவிடலாம் என்று ஆளவந்தார்கள் நம்பிக்கொண்டு இருக்கிறார்கள்.

ஒன்று, அண்ணாவை தண்டனை காலமுடிவிற்குள் விடுதலை செய்து, திராவிட மக்களின் ஆதரவைப்பெற்றுக்கொள்வது.

மற்றொன்று, 'ஆரிய மாயை' வழக்கை அப்பீல் செய்யாமல் பார்த்துக் கொண்டு, உயர் நீதிமன்றத்தின் சொட்டுச் சொல்லிலிருந்து தப்பித்துக் கொள்வது.

ஆளவந்தார்களின் கருணை கடாட்சத்தால் அண்ணா விடுதலை அடைந்தார் என்ற அபவாதம் அழிக்கப்பட்டாகவேண்டும். 'பாரீர்! எங்கள் அமைச்சர்களின் தயவால் உங்கள்

[அடுத்த பக்கம் பார்க்க]

[முதல் பக்கத் தொடர்ச்சி]

அண்ணா விடுதலை பெற்றார், காணீர்!' என்று காங்கிரஸ் கட்சி கண்ணியர் கூறுவர் கேலி கலந்தக் குரலில் நமது திராவிட இனக் காளையைப் பார்த்து. காங்கிரஸ் கனவானின் கூற்றில் கடுகத்தனையும் உண்மை இல்லையாயினும், நமது காளையின் கண்கள் சிவக்கும். இந்த நிலை இருத்தல் ஆகாது. இதற்காகவேனும் நாம் 'ஆரிய மாயை' வழக்கைத் தொடர்ந்து நடத்தி, வெற்றி கண்டாக வேண்டும்.

நீதிமன்றத்தால் நாம் களங்கமற்றவர்கள் என்று தீர்மானிக்கப்பட்டு இருக்கிறோம். நமது பணி துவேஷ மற்றது என்ற நற்சாட்சியைப் பெற்று இருக்கிறோம். நாம் இனி எதற்கும் அஞ்சத் தேவையே இல்லை.

'ஆரிய மாயை' வழக்கிலும் கீழ்மன்றத் தீர்ப்பை எதிர்த்து உயர் மன்றத்தில் வழக்காடி ஆகவேண்டும். அதிலும் நாம் வெற்றி பெறுவது உறுதி, நமது எழுத்தும் பேச்சும் அறத்தொடு ஒன்றிப் போயிருக்கின்ற காரணத்தால்.

வெற்றிகண்ட அண்ணா வருக! அன்புருவான அண்ணா வருக! மீண்டும் எங்களுக்கு வழிகாட்டுக, அண்ணா! மீண்டும் ஆளவந்தார்களின் அரண்மனை புக்க அழைப்புகிடைக்கின், அண்ணா. நின் அரும் தம்பிமார்களில் ஆயிரத்துக்குக் குறையாதவனை உடனழைத்துச் செல்வதென இன்றே உறுதிகொண்டு, பணியைத் தொடங்குவீராக, விட்டுச்சென்ற இடத்திலிருந்து!

வாழ்க அண்ணா! வெல்க திராவிடம்! திராவிட நாடு திராவிடருக்கே!

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

செய்வதிலும் நாட்டுக்கு நலந் தேடுவதிலுந் திரும்புகின்றதோ வென்றால், இல்லை, இல்லை. தாமிருக்கும் வேலையினளவுக்கு வருஞ் சம்பளத்தில் மனநிறைவு பெறாமல், தாம் தமக்கு மேலுள்ளவர்கட்குக் கைக்கூலி கொடுத்ததுபோலவே தாமுந் தமக்குக் கீழுள்ளவர் பாலுந், தமது தலைமைக்குக் கீழ் அடங்கி நடக்கும் ஏழை யெளியவர்கள் பாலுமிருந்து ஓயாமற் கைக்கூலி வாங்கின வண்ணமாயிருக்கின்றார்கள்.

அங்ஙனம் ஏழை எளியவர்கள் அழ அழ அவர்கள் வயிற்றில் அடித்துச் சேர்க்கும் பொருளையாவது அவர்கள் நல்வழியிற் செலவு செய்கின்றார்களோ வென்றால் அதுவுமில்லை. இரப்பவர்க்கு ஒரு கை முகந்த அரிசி தானுங் கொடுக்க இசையார்; கற்பவர்க்குங் கற்றவர்க்கும் ஒரு காசு தானுங் கொண்டார். மற்றுத், தம் மனைவிமக்கட்குப் பொற்சரிகை பின்னிய பட்டாடைகள் வாங்கிக் கொடுப்பதிலும், வைரம் இழைத்த உயர்ந்த அணிகலங்கள் செய்வித்து அணிவதிலும், அவர்கள் புழங்குதற்குப்பொன் வெள்ளிகளிற் சமைத்த ஏனங்கள் வாங்கிச் சேர்ப்பதிலும், அவர்களுந் தாமும் ஏறி ஊர் சுற்றுவதற்குக் குதிரை வண்டிகள், இவற்றினும் விலையுயர்ந்த உந்து வண்டிகள் (Motor cars) அமைத்துக் கொள்வதிலும், நாடகசாலைகள் குதிரைப் பந்தயங்கள் வட்டக்காட்சிகள் (Circus) சென்று காண்பதிலும் இன்னும் இவைபோன்ற வெற்றாரவாரங்களிலுமாகத் தாம் ஏழைக் குடிமக்களிடமிருந்து பகற்கொள்ளை யடித்த பெருந்தொகையான பொருளைச் செலவு செய்துவிடுகின்றார்கள். இன்னும் பலர், சாராயங் குடித்தும், ஊன் தின்றும், வேசியரை மருவியும் அப்பொருளைப் பாழாக்குகின்றார்கள். மற்றும்பலர், அப்பொருளைக்கடன் கொடுத்துவட்டிமேல்வட்டிவாங்கியும், அம்முகத்தால் ஏழையெளியவர்களின் நிலங்கள் வீடுகள் பண்டங்களைக் கவர்ந்துந் தமதுபொருளை ஆயிரம் நூறாயிரங்கோடி என்னும் பேரளவாகப் பெருக்குவதிலேயே முனைந்துநிற்கின்றார்கள்.

இவ்வாறாக, ஆங்கிலங் கற்கும் இந்நாட்டவர் எந்த இனத்தைச் சேர்ந்தவராயிருந்தாலும், அவர் எல்லாம் மேலு மேலும் பொருள் சேர்ப்பதற்கே தாங் கற்ற கல்வியைக் கருவியாக்கி, ஏழைக் குடிமக்களைப் பாழாக்குகின்றார்கள். இந் நிலையிற் பார்ப்பனரும் பார்ப்பனரல்லாதாரும் ஒத்தவர்களாகவேயிருக்கின்றார்கள். தந்நலந் தேடுவதிலேயே நாட்டம் வைத்திருக்கும் இவர்கள், அவைக்களங்களில் மேடைமேலேறிப் பேசும்போது மட்டும் ஏழைமக்களுக்காகக் கண்ணீர்விட்டுக் கதறுகின்றார்கள்! இஃது எதனை ஒத்திருக்கின்றதென்றால், "ஆடு நனைகிறதே யென்று கோநாய் குந்தி யழுததையே" ஒத்திருக்கின்றது. மேடைமேல் இரக்கங் காட்டிப் பேசிய அவர்கள் வீட்டுக்கு, ஏழையிரவலர்கள் சென்றால், அவர்களை ஏசித் துரத்துகின்றார்கள்.

Edited, Printed and Published bY P. C. Manickavachagam alias Kanchi Manimoliyars Free Printers 147, Coral Merchant St., Madras, Joint Editor, M. Ilancheliyan B. A.(Hon)